தானியேல் தீர்க்கதரிசன விளக்க உரை...

1991

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய *7* ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் *200* ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக *(E-Books)* இலவசமாக *(மத்தேயு 10:8)* உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் *(Download)* செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: *www.WordOfGod.in*

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் *(E-Book)* வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய *WhatsApp* எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ *(Email)* எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

தானியேல் தீர்க்கதரிசன விளக்க உரை

1991

ஆக்கியோன்

S. ஜாயிஸ் சன்னியாசினி

B.C.445
B.C.330

ஜாதிகளின் காலம்

பெரிய இடைக்காலம்

…களுக்கிடையில் உள்ள சம்பவங்கள் (சபையுகம்)

… தானியேலுக்கு வெளிப்படவில்லை.

ஆயிரம் வருட ஆளுகை

கொடிய பயங்கரமான

[illegible] கிறிஸ்து அல்லது
அந்திக் கிறிஸ்து

தானி 11:29-45 | II தெச 2:3-12.

கிறிஸ்துவுக்குள் என் அன்பான வாசகர்களே!

எனது சொந்த ஊர் குமரி மாவட்டத்தில் மார்த்தாண்டம் என்ற இடத்தின் சமீபம் பாகோடு என்ற கிராமம். நான் 12-வது வயதில் கிறிஸ்துவை என் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டேன்.

1944-1947 வரை என் பாடசாலையில் மாணவ மாணவிகள் மத்தியில் கர்த்தருக்கு சாட்சி கூறி வந்தேன். 1947 ஜூனில் என் படிப்பை முடித்தேன். அப்பொழுது கர்த்தர் தனது ஊழியத்திற்காக வீட்டை விட்டு புறப்படும்படி அழைத்தார். ஒரு வேலை பார்த்து அதனால் கிடைக்கும் ஊதியத்தைக் கொண்டு கர்த்தருடைய ஊழியம் செய்வேன் என ஜெபித்தேன். அதற்கு ஆண்டவர் மகளே உன்பணம் எனக்கு வேண்டாம். நீ எனக்கு போதும் என்று என்னோடு பேசினார்.

1947-ம் ஆண்டிலேயே என் வீட்டைவிட்டு கர்த்தருடைய ஊழியத்திற்கென புறப்பட்டேன். ஊழியத்தில் ஏற்பட்ட நெருக்கங்கள் பல. "அத்தியின் துளிர்ப்பும் கர்த்தரின் வருகையும்" என்ற புத்தகம் எழுதுகையில் பலவியாதிகள் என்னை நெருக்கின. சத்துருவின் சதிமோசங்கள் பல ஏற்பட்டன.

இப்போது எனக்கு வயது 65, 1944-லிலிருந்து 1991 வரை

கர்த்தருடைய ஊழியம் செய்து வருகிறேன். என்னோடு ஊழியத்தில் பங்கு கொண்டவர்கள் 25 பேர். அதில் சிலரை கர்த்தர் தமது இராஜ்யத்திற்கு அழைத்துக் கொண்டார். மீதிப்பேர் ஊழியம் செய்து வருகிறோம்.

இரண்டாவது புஸ்தகமாகிய "தானியேல் தீர்க்கத் தரிசன விளக்க உரை" என்ற புஸ்தகம் எழுத ஆரம்பித்தபோது கடுமையான வியாதிகள் என்னைத் தாக்கினதால் அதை எழுதி முடிக்க 4 ஆண்டுகள் ஆயின. மேற்கூறிய கஸ்டங்களின் மத்தியில் கடந்த 47 ஆண்டுகளாக அவரது சேவை செய்யக் கர்த்தர் உதவி செய்தார். இதை வாசிப்போர் எங்களுக்காகவும் ஸ்தாபனத்துக்காகவும் ஜெபிக்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இப்படிக்கு

கிறிஸ்துவுக்குள் சகோதரி

S. ஜாயிஸ் சன்னியாசினி

தானியேல் தீர்க்கத்தரிசனம்

முகவுரை

வேத புத்தகத் தீர்க்கத்தரிசனங்களில் முக்கியமானதும் ஆராட்சிக்குரியதுமான ஒரு புத்தகம் தானியேல் தீர்க்கத்தரிசனம். இதைப் பலரும் பலவிதத்தில் ஆராய்ந்து பலவிதமான சந்தேகங்களை எழுப்பி யதார்த்தமான சத்தியம் அறியாமல் தவித்துக் கொண்டிருக்கின்றனர். இதனுடைய உண்மையை அறிந்தவர்கள் ஒரு சிலர் மட்டும் தான். பழைய ஏற்பாட்டில் தானியேல் தீர்க்கத்தரிசனமும், புதிய ஏற்பாட்டில் வெளிப்படுத்துதல் விசேஷமும் கிறிஸ்தவ சபையின் இரண்டு நம்பிக்கையின் தூண்களாகும். கடைசிக்கால சம்பவங்களைக் குறித்தும், மகா உபத்திரவகாலத்தின் கஷ்டங்களைக் குறித்தும் அறியாதபடி இன்றுள்ள உலகத்தின் கண்கள் மறைக்கப்பட்டிருக்கிறது. ஜனம் பெருந்தீனியினாலும், வெறியினாலும், லௌகிக கவலையினாலும் அவதிப்பட்டு உலக மாயையில் அமிழ்ந்து கிடக்கிறது. எவ்வளவு சுவிசேஷம் கேட்டாலும் வேதத்தின் ரகசியங்களை அறியாதபடி மக்களுடைய இருதயக் கண்களை சாத்தான் மூடிப் போட்டான்.

ஆனால் நித்தியானந்த தேவனுடைய மாற்றம் இல்லாத திவ்ய ஆலோசனைகள், வெளிப்படுத்தல்கள் இவைகளை தம்முடைய பிள்ளைகள் மூலமாய் கர்த்தர் இந்த உலகத்துக்கு வெளிப்படுத்தியுள்ளார். பழைய ஏற்பாட்டில் 27-வது புத்தகமாகிய தானியேல் தீர்க்கத்தரிசனமும் புதிய ஏற்பாட்டில் 27-வது புத்தகமாகிய வெளிப்படுத்தல் விசேஷமும் இரண்டு யுகங்களில் உள்ள பக்தர்களான தேவதாசர்களைக் கொண்டு கர்த்தர் நமக்கு வெளிப் படுத்தினார். வேத புத்தகத்தில் யாதொரு குற்றமும் இல்லாத மனுஷன் தானியேல். இவன் பாபிலோனில் பெரிய அதிகாரியாய் இருந்தான். 120 ராஜ்யங்களினுடைய பிரதானிகளுக்கும் தேசாதிபதிகளுக்கும் மேற்பட்டவனாக இருந்தான். தானியேல் ஜெபிக்கவும், வேத புத்தகம் படிக்கவும் ஏராளம் சமயம் எடுத்திருந்தான். இஸ்ரவேலருடைய பாபிலோனின் சிறையிருப்பு மட்டுமல்ல, அவர்களின் விடுதலை, கர்த்தருடைய வருகையின் காரியங்கள், மகா உபத்திரவ காலத்தின் சம்பவங்கள், அந்திக்கிறிஸ்து, சாத்தான், கள்ளத்தீர்க்கத்தரிசி, கடைசியாக இயேசுகிறிஸ்துவினுடைய ஆளுகை எல்லாவற்றையும் தானியேல் மூலம் தேவன் நமக்கு வெளிப்படுத்தியிருக்கிறார்.

வெளிப்படுத்தியிருக்கிறார்.

எந்த சமயத்திலும் இயேசுவின் வருகைஇருந்தால் அவரை சந்திக்கக் காத்திருத்தல், மிகவும் உற்சாகத்தோடே கர்த்தருடைய ஊழியத்தை செய்தல் இவைகளைக்குறித்து இந்த புத்தகமூலம் நாம் அறிந்து கொள்ளலாம். பழைய ஏற்பாட்டில் தேவனுக்குப் பிரியமானவன் தானியேல். புதிய ஏற்பாட்டில் கர்த்தருடைய சிநேகிதன் அப்போஸ்தலனாகிய யோவான்.

தானியேல் தீர்க்கத்தரிசனத்தைக் குறித்து படிக்கப்படிக்க எனக்கு உள்ளத்தில் சந்தோஷமும், அதிகம் படிக்க வேண்டும் என்ற ஆவலும், மற்றவர்களுக்கு அறிவிக்க வேண்டும் என்ற ஏவுதலும் வந்து கொண்டேயிருந்தது. பல வருடங்களாக இதைப்பற்றி ஒரு புத்தகம் எழுதவேண்டுமென்ற ஏவுதல் என்னை அழுத்திக்கொண்டே இருந்தது. இது சம்மந்தமான பல புத்தகங்கள் படிக்கவும், பல வேதபாடங்களில் பங்கெடுக்கவும், இதைப்பற்றி ஆராயவும் உள்ள சந்தர்ப்பத்தை கர்த்தர் எனக்குத் தந்தார். இதற்காக அதிக பிரயாசங்கள் எடுக்க வேண்டிவந்தது. புத்தகம் எழுத வேண்டும் என்று ஆரம்பித்ததும் பலவிதமான வியாதிகளும், மற்று பல நெருக்கங்களும், கடினமான சூழ்நிலை களும் வந்து மிக அவதிப்பட்டேன். 1969-ம் வருடம் "அத்தியின் துளிர்ப்பும் கர்த்தரின் வருகையும்" என்ற இரண்டாம் வருகை புத்தகம் எழுதும்போதும் இதே மாதிரி கஷ்டங்கள் என்னை மேற்கொண்டன.

சாத்தானுக்கு கர்த்தருடைய பிள்ளைகளின் எதிர்கால நம் பிக்கையின் அனுபவங்களைக்குறித்தும், அவர்கள் அனுபவிக் கப் போகிற சந்தோஷங்களக் குறித்தும் எழுதுவதோ, சொல் வதோ, பிரசங்கிப்பதோ மிகவும் எதிரான காரியம். ஏனென்றால் இந்த மேலான அனுபங்களை கர்த்தருடைய பிள்ளைகள் பெற் றுக்கொள்ளக் கூடாதென்று அவன் அதிக பிரயாசம் எடுத்து, கிரியை செய்கிறான். ஆகையால் இப்படிப்பட்ட நேரங்களில் அவன் அதிகத்தடை செய்வான். எப்படியும் கர்த்தர் தடைகளை அகற்றி இந்த புத்தகத்தையும் எழுதி முடிக்கும்படி கிருபை செய்தார் அவருக்கு ஸ்தோத்திரம். இதை எழுதும் போது நான் ஒரு வியாதிக்காரியாக இருந்து கொண்டே எழுதி முடித்தேன். இதை படிக்கிற யாவருக்கும் கர்த்தர் ஆழமான அறிவை தந்து, ரகசியங்களை வெளிப்படுத்தி, இந்த யுகத்தின் கடைசி சம்பவங்

களுக்கு நீங்கலாக்கி தமது வருகைக்கென்று ஆயத்தப்பட உதவி செய்வாராக!

எனது எளிய அறிவோடும், நான் படித்த வேத பாடங்கள், சரித்திர புத்தகங்கள், இவை எல்லாவற்றின் அறிவோடும் ஆவியானவரின் அதிசய நடத்துதலோடும் இப்புத்தகத்தை எழுதுகிறேன். இதில் குறைவுகள், ஏற்றத்தாழ்வுகள் இருந்தால் வாசிக்கும் நண்பர்கள் தயவுடன் பொறுத்துக்கொள்ள அன்புடன் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இந்த புத்தகத்தை தேவ பயத்தோடும் ஜெபத்தோடும் கர்த்தருடைய பரிசுத்த பாதத்தில் சமர்ப்பிக்கிறேன்.

எதிர்பார்ப்போடு
எல்லா தேவ பிள்ளைகளின் உடன் சகோதரி
எஸ். ஜாயிஸ் சன்னியாசினி

பாகோடு

1/7/88

மதிப்புரை

Bro. P.T. பக்தவச்சலம்
கன்மலைக்கூடம்
மார்த்தாண்டம்
கன்னியாகுமாரி மாவட்டம்

பரிசுத்த வேதாகமம் தேவனுடைய வார்த்தை என்றழைக் கப்படுகிறது. வேத வசனங்கள் அனைத்தும் ஆவியாகவும், ஜீவ னாகவும் இருக்கின்றன, "உம்முடைய வசனமே சத்தியம் என் றார் நமது ஆண்டவர். யோவான் 17:17

திருவசனங்களுக்கு விளக்கங்கள் கூறி எழுதப்பட்ட நூற் கள் பல. அவற்றில் ஒரு சில நூற்கள் மட்டுமே ஆத்துமாக்க ளுக்கு அதிக பயனளிக்கின்ற முறையில் காணப்படுகின்றன.

திருமதி S. ஜாயிஸ் சன்னியாசினி அம்மா அவர்களால் எழுதப்பட்ட "தானியேல் தீர்க்கத்தரிசன விளக்கவுரை" என் னும் நூல் அதனை வாசிக்கும் அனைவருக்கும் மிகவும் பிரயோ ஜனமாக இருக்கும் என்று நான் உறுதியாகக் கூற முடியும்.

இந்நூல் துவக்கம் முதல் இறுதிவரையிலும் கற்பவர் உள் ளத்தைக்கவரும் தன்மையில் அமைந்துள்ளது, இதன் ஒவ் வொரு பக்கத்திலும் தேவஞனம் கமிழ்கிறது, இது கற்போரை சிந்திக்க வைக்கும் அறிவு களஞ்சியமாகவும், பாவத்தை உணர்த் திக்காட்டும் படிகமாகவும், மனிதனை தேவனோடு இணைக்கும் சங்கிலியாகவும், எதிர்காலத்தில் ஏற்பட இருக்கும் நிகழ்ச்சி களை எடுத்துரைக்கும் தீர்க்கத்தரிசன திறவுகோலாகவும் நொறுங்குண்ட உள்ளங்களை குணமாக்கும் உன்னத தைலமாக வும், இயேசுகிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு நம்மை ஆயத் தமாக்கும் வழிகாட்டியாகவும் இருக்கிறது என்றால் அது மிகை யாகாது.

இந்நூலை இவ்வளவு சிறப்பாகவும், தெளிவாகவும் எளிய நடையில் யாவருக்கும் விளங்கக்கூடிய முறையில் எழுதி முடிக்க துணை புரிந்த தேவாதி தேவனை நான் நன்றியுடன் துதிக்கிறேன்.

இவ்வம்மையாரை நான் நீண்டகாலமாக நன்கறிவேன், அவர்களது ஜெபவாழ்க்கையும், இனிய பேச்சும், தேவகிருபையு

டன் அவர்கள் இடைவிடாமல் செய்துவரும் அரும்பணிகளும் என் இதயத்தைக் கவர்ந்துள்ளன. இவர்களால் அதிக ஜெபத்தோடும், பிரயாசத்தோடும் எழுதப்பட்ட இந்நூலை அனைவரும் கற்றுப்பயனடைய அன்புடன் வேண்டுகிறேன்.

இவண்
கிறிஸ்துவின் பணியில்
P.T. பக்தவச்சலம்

மார்த்தாண்டம்

6-12-88

சிறப்புரை

THIRU.K. ஜெயபாண்டிய ராஜ் M.Sc.,M.Phil
கணித பேராசிரியர்
ஊரிஸ் கல்லூரி
வேலூர் 632 001

வேத புத்தகம் என்பது ஆழ்ந்த சத்தியங்கள் அடங்கிய ஒரு அற்புதகளஞ்சியம். இது மற்ற கிரந்தங்கலைப் போல் அல்ல. இது மானிடரின் மன நோவுகளை மாற்றுகின்ற மாசற்ற மருந்து. இதில் உள்ள இரு ஏற்பாடுகளையும் வாஞ்சையுடன் படித்தல் மிக்கதேவை. ஆனால் இக் காலங்களில் பழய ஏற்பாட்டு புத்தங்களை விரும்பிபடிக்கும் கிறிஸ்தவர்கள் வெகுசிலரே. அதிலும் அதைப் புரிந்து படிப்பவர்கள் மிகச் குறைவே.

இதற்கு அநேகர் பல காரணங்கள் கூறுகின்றனர். பழய ஏற்பாட்டு புத்தகங்கள் கூறும் தீர்க்கத்தரிசனங்கள் கடினமாக உள்ளது என்கிறார்கள் சிலர். பழைய ஏற்பாட்டு செய்திகள் இன்று தேவை இல்லை என்கிறார்கள் பலர். பழைய ஏற்பாட்டின் தீர்க்கத்தரிசன ரகசியங்களை இந்தக்கடைசிக் காலத்தின் மக்கள் கற்று கொள்வது மிகத் தேவை. ஆனால் புதிய ஏற்பாடு புத்தகங்களை படிப்பது போல் பழய ஏற்பாடு புத்தகங்களை நாம் படிப்பதில்லை.

இக் குறைவை நீக்கும்படி எஸ். ஜாயிஸ் சன்னியாசினி அம்மா அவர்கள் எழுதிய "தானியேல் தீர்க்கத்தரிசன விளக்கவுரை" என்ற புத்தகம் யாவருக்கும் நன்றாய் விளங்கக்கூடிய முறையில் எழுதப்பட்டுள்ளது. அம்மா அவர்கள் தங்கள் சொந்த அனுபவத்துடன் பரிசுத்த ஆவியின் ஏவுதலினால் அதிக வருட முயற்சியுடன் உருவாக்கியிருக்கும் இப்புத்தகத்தில் புதிய புதை பொருள்களை கண்டுபிடித்து மகிழ்ச்சி அடையலாம்.

இது சரித்திர சம்மந்தமான ஆதாரங்களுடன் எழுதப்பட்டிருக்கும் ஒரு விளக்க உரை அவர்களுக்கு வேதத்தின் சரித்திர பாடத்தில் இருக்கிற ஆர்வத்தையும் அறிவையும் காட்டுவதோடு வேதாகமத்தில் கூறியுள்ள சம்பவங்கள் சரித்திர பூர்வமான சம்பவங்களே என்று நிரூபிக்கின்றன.

தானியேல் புத்தகம் ஆரம்ப நாட்களில் 14 அதிகாரங்களை

கொண்டிருந்ததாகவும், பிற்காலங்களில் கடைசி 2 அதிகாரங்கள் தள்ளப்பட்டன என்று கூறியதோடு நில்லாது, அதில் என்ன உள்ளன என்று விளக்கியிருப்பது போற்றப்பட வேண்டியதாகும்.

தானியேல் தீர்க்கதரிசனத்திற்கும், வெளிப்படுத்தின விசேஷத்திற்கும் உள்ள தொடர்பு அருமையாக எடுத்து கூறப்பட்டுள்ளது.

இந்த புத்தகத்தை எழுதிய ஜாய்ஸ் கன்னியாசினி அம்மாளை நான் அதிக காலமாக நன்கறிவேன். அதிக ஆழமான தேவ செய்திகளை கொடுக்கக் கூடியவர்கள். ஆத்துமாக்களைப் பற்றிய தாகம் உள்ளவர்கள் இவர்கள் எழுதிய இந்த புத்தகம் கடைசிக் காலத்தின் சம்பவங்களை அறிந்து கொள்ள மிகவும் பிரயோஜனமுள்ளது. கிறிஸ்துவ உலகத்திற்கு தேவையான இந்த புத்தகத்தைப்படித்து கர்த்தரின் வருகையை சந்திக்க ஒரு கூட்டம் ஜனத்தை ஆயத்தபடுத்த இப்புத்தகம் பயன்படும் என்று நம்பி ஜெபத்துடன் என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

இவண்
பரமனின் பணியில்
I. ஜெயபாண்டியராஜ்

வேலூர்,

27.6.88

பொருளடக்கம்

தானியேல் தீர்க்கத்தரிசன வியாக்கியானம்.

1. தீர்க்கத்தரிசன வார்த்தை
2. தீர்க்கத்தரிசனத்துக்குத் தேவையான ஐந்து காரியங்கள்
3. தானியேல் தீர்க்கத்தரிசனத்தைப் பற்றிய சிறு உரை
4. வசனத்தின் விபரங்கள்
5. புற ஜாதிகளுடைய ராஜ்யங்கள்
6. புத்தக பிரிவுகள்
7. தானியேலைப்பற்றிய விபரங்கள்

அதிகாரம் 1
தானியேல் தீர்க்கத்தரிசன விளக்க உரை

1. முதலாம் சரித்திரப்பாகம், ஜாதிகளின் ஆளுகையின் ஆரம்பம், எருசலேம் பிடிக்கப்படுதல்
2. எபிரேய அடிமைகள்
3. வேறு பட்ட ஜீவியம்

அதிகாரம் 2

1. நேபுகாத் நேச்சாரின் சொப்பனமும், கலக்கமும்
2. முழு இரவு ஜெபம்
3. ஜாதிகளுடைய காலம்
4. சொப்பனம்
5. சொப்பன வியாக்கியானம்
6. சரித்திர நிறைவேறுதல்
7. பாபிலோன் சாம் ராஜ்யம்
8. மேதியா, பெர்சியா ராஜ்யங்கள்
9. கிரேக்கு சாம் ராஜ்யங்கள்

10.ரோம் சாம் ராஜ்யம்

11.பாதங்களும், கால் விரல்களும்

12.கல் சாம் ராஜ்யம்

13.சிலையின் உலோகங்கள் குறிப்பிடும் ராஜ்யங்கள்

14.தானியேலிற்கு ராஜாவிடம் உள்ள உரிமைகள்

15.தானியேலின் பிரதிபலன்கள்ா

அதிகாரம் 3

1. பொற்சிலை

2. சிலையின் பிரதிஷ்டை

3. பாபிலோன் மதம்

4. அறைகூவல் அங்கிகரிக்கப்படுதல்

5. ஆபத்தில்லாத அக்கினிச்சூளை

6. அறிவடைந்த ராஜா

7.ராஜாவின் விளம்பரம்

8. அற்புதத்தின் ரகசியம்

அதிகாரம் 4

1. விருட்ச சொப்பனம்

2. விளம்பரம்

3. ராஜாவின் கலக்கம்

4. சொப்பனம்

5. சொப்பன நிறைவேறுதல்

6. ராஜா சுகம் அடைதல்

அதிகாரம் 5

1. பாபிலோனின் தோல்வி, பாபிலோன் நகரம்

2. பெல்ஷாத்சாரின் விருந்து
3. தேவனின் கை விரல்
4. வியாக்கியானத்துக்கு ஆள் தேடுதல்
5. பாபிலோனின் அழிவு
6. கோரேஸ் பாபிலோனைப் பிடித்தல்
7. பாபிலோனின் உன்னத நிலமை
8. மகா பாபிலோன்

அதிகாரம் 6

1. பயப்படாத தானியேல்
2. கலக்கமுள்ள ராஜா
3. சிங்கக் கெபி
4. பெரிய விடுதலை
5. நீதியான நியாத்தீர்ப்பு
6. ராஜாவின் தீர்ப்பு
7. மனிதனை தேவன் ஆக்குதல்

இரண்டாம் பாகம் அதிகாரம் 7-12 வரை

தீர்க்கத்தரிசனம் அதிகாரம் 7

நான்கு பெரிய மிருகங்கள், தீர்க்கத்தரிசனங்களின் காலம்

1. முதலாம் மிருகம்
2. இரண்டாம் மிருகம்
3. மூன்றாம் மிருகம்
4. நான்காம் மிருகம்
5. தானியேலின் இரண்டாம் தரிசனம்
6. நியாயத்தீர்ப்பின் சபை

7. நியாயத்தீர்ப்பின் சிங்காசனத்தில் இருக்கிறவர் யார்?

8. தானியேலின் மூன்றாவது தரிசனம்

9. மனுஷ குமாரன் ராஜ்யம் ஏற்றுக் கொள்ளுதல்

10. தானியேலின் கலக்கம்

11. தரிசனங்களின் வியாக்கியானம்

12. காலங்களும், பிரமாணங்களும்

13. மிருகம்

14. தானியேல் கண்ட மிருகம்

15. யோவான் கண்ட மிருகம்

16. சின்னக் கொம்பு

17. பழைய ஏற்பாட்டின் பெயர்கள்

18. புதிய ஏற்பாட்டின் பெயர்கள்

19. மிருகத்தைக் குறித்து யோவான் கண்ட 2 தரிசனம்

20. சிவப்பு நிறமுள்ள மிருகம்

21. அந்திக் கிருஸ்து

22. சாதாரணமற்ற மனிதன்

23. கள்ளத் தீர்க்கதரிசி

அதிகாரம் 8

1. ஆட்டுக்கடாவும் வெள்ளாட்டுக் கடாவும், தரிசனத்தின் இடமும் காலமும்

2. ஆட்டுக் கடாவைக் குறித்துள்ள தரிசனம்

3. வெள்ளாட்டுக் கடா

4. நான்கு கொம்புகள்

5. சின்னக் கொம்பு (2)

6. தூதனின் சம்பாஷணை

7. தரிசனம் வியார்த்தி பண்ணுபவன்
8. தரிசனத்தின் வியாக்கியானம்
9. சின்னக் கொம்பு (3)
10. விருப்பம் போல் கிரியை செய்யும் ராஜா

அதிகாரம் 9
எழுபது வாரம்

1. தரிசனத்தின் சமயம்
2. தானியேலின் ஜெபம்
3. அறிக்கையிடுதல்
4 விண்ணப்ப ஜெபம்
5. தடைப்பட்ட ஜெபம்
6. 70 வாரங்கள் (1)
7. மீறுதலை தவிர்க்க
8. பாவங்களைத் தொலைக்க
9. அக்கிரமத்தை நிவிர்த்தி பண்ண
10. நித்திய நீதி உண்டு பண்ண
11. தரிசனத்தையும், தீர்க்கத்தரிசனத்தையும் முத்திரை போட
12. மகா பரிசுத்தமானவரை அபிஷேகம் பண்ண
13. 70-வாரங்கள் (2)
14. இயற்கைக்குரிய நாளாகமம்
15. எழுபது வாரத்தின் ஆரம்பம்
16. முதலாம் கட்டளை
17. இரண்டாம் கட்டளை
18. மூன்றாம் கட்டளை
19. நான்காம் கட்டளை

20. 66 வருடத்தின் முடிவு

21. பெரிய இடைக் காலம்

22. ஒலிவ மலை பிரசங்கம்

23. தானியேலின் எழுபது வாரமும், கிறிஸ்துவின் ஒலிவ மலை பிரசங்கமும், வெளிப்படுத்தல் புத்தகமும் ஒத்துப்பார்த்தல்

24. தானியேலின் எழுபது வாரம்

25. இரண்டாம் வெளிப்படுத்தல் (கிறிஸ்துவின் ஒலிவமலை பிரசங்கம்) மத் 24:1

26. இரண்டாம் வெளிப்படுத்தல் மத் 24:29.31

(வெளிப்படுத்தல் விசேஷம்)

27. வேதபுத்தகத்தின் எழுபது வாரங்கள்

28. முதலாவது எழுபது வாரங்கள்

29. இரண்டாவது எழுபது வாரங்கள்

30. ஜாதிகளின் கால தீர்க்கம்

31. மூன்றாவது எழுபது வாரங்கள்

32. நான்காவது எழுபது வாரங்கள்

33. இடைக்காலம்

34. மேசியா சங்கரிக்கப்படுதல்

35. எருசலேம் நகரமும், தேவாலயம் என்ற பரிசுத்த ஸ்தலமும் அழிக்கப்படுதல்

36. நகரமும், பரிசுத்த ஸ்தலமும் அழிக்கிற ஜனக்கூட்டத்திலிருந்து எழும்பும் பிரபு

37. முடிவு காலம் வருமட்டும் பலஸ்தினா நாடு பாழாக்கப்படும், அதாவது கிறிஸ்துவின் இரண்டாம் வருகையோடு கூட எழுபது வாரம் முடியும். இயேசு கிறிஸ்து அந்திக் கிறிஸ்துவை அழித்தல்.

38. எழுபது வாரம்

10ம் 11ம் 12ம் அதிகாரங்கள்

பாகம்—II 10:1 11:1

1. மனித குமாரனின் தரிசனம்

2. பரலோக தூதன்

3. பெர்சியா ராஜா

4. அந்தகாரத்தின் ராஜா

5. காபிரியேல் தூதனின் சந்திப்பு

6. தானியேல் பெலன் அடைதல்

வடக்கும் தெற்கும் உள்ள ராஜாக்களுடைய சரித்திரம் தீர்க்கத்தரிசனத்தில்

பாகம்-II *(11:2-35)*

1. இரண்டாம் வாக்கியம்

2. வசனம் - 5

3. வசனம் - 6

4. வசனம் - 7-8

5. வசனம் - 9-10

6. வசனம் - 11-12

7. வசனம் - 13

8. வசனம் - 14

9. வசனம் - 15-19

10. வசனம் - 20

11. அந்தியோக்கியஸ் எப்பிபானோஸ்

12. வசனம் -21-31

13. அந்தியோக்கியஸ் எப்பிபானோசுக்கும், மேசியா பிரபுவுக்கும் இடையுலுள்ள காலம் B.C 164-A.D 30) 32-33 வசனம்

பாகம் மூன்று (11:36 - 12:13)

காலத்தின் கடைசி

1. விருப்பம் போல் கிரியை செய்யும் ராஜா 36-45
2. பிரபுவான மிகாவேல்
3. மகா உபத்திரவம்
4. யூதர்களின் உயிர்த்தெழுதல் (எரேமி 16:14-15)
5. ஞானவான்களின் பிரதி பலன்
6. முத்திரை போடப்பட்ட புத்தகம்
7. கடைசி காலத்தின் கால தூரம்
8. தானியேலின் மகிமையான பங்கு

கத்தோலிக்க வேதபுத்தகத்தின் 13,14 அதிகாரங்கள்

1. பேல் என்னும் சிலை
2. தானியேல் நாகப்பாம்பை கொன்றது
3. பாபிலோனியர் இரண்டாம் முறை தானியேலை சிங்கக் கெபியில் போட்டது.

தானியேல் தீர்க்கத்தரிசன வியாக்கியானம்
தீர்க்கத்தரிசன வார்த்தை

பரிசுத்த வேதாகமம் விசேஷித்ததும், முக்கியமானது மான ஒரு புத்தகம் ஆகும் அதன் உண்மையான நிலைமை, அதிகாரம், பரிசுத்த ஆவியின் ஏவுதல் இவைகள் தீர்க்கத் தரிச னங்களின் நிறைவேறுதல் என்பதை நாம் காணலாம்.

வேறு எந்த மதத்திலுள்ள புத்தகமும் எதிர் காலத்தைக் குறித்து தீர்க்கத்தரிசனம் சொல்வதில்லை. எதாவது எழுதுப வன் எதிர்காலத்தைக் குறித்து சொல்ல பிரயாசப்பட்டால் அவ னுடைய எழுத்துக்களுக்கு மிகவும் சீக்கிரத்தில் முடிவு வருவ தைப் பார்க்கலாம். தீர்க்கத்தரிசனம் என்றால் நடக்கப் போகிற சம்பவங்களை முன் கூட்டி எழுதின சரித்திரம் என்பது பொருள். இதில் தேவனின் முன்னறிவின் சாட்சி நமக்கு காண முடியும். இந்தக் காரியம் புற ஜாதிகளின் ராஜாவாகிய நேபு காத்நேச்சாருக்கு அவனுடைய சொப்பனத்தின் வியார்த்தியில் தானியேல் வெளிப்படுத்தியிருக்கிறான்.

இனி மேல் சம்பவிக்கப் போகிறதை தேவன் ராஜாவுக் குத் தெரிவிக்கிறார்; சொப்பனம் நிச்சயம், அதன் அர்த்தம் சத்தியம் என்றான்.(தானி *2:45*)

தீர்க்கத்தரிசனத்தில் இருவிதமுண்டு; ஒன்று காரியங்களை வெளிப்படுத்தும் வரமும், மற்றொன்று எதிர் காலத்தைக் குறித் துச் சொல்லும் வரமும் ஆகும். தீர்க்கத்தரிசிகள் காரியங்களை முன் கூட்டி தெளிவாகச் சொல்லுவார்கள். அவர்களுக்கு உள் ளான காழ்ச்சியும், எதிர்காலத்தரிசனமும் உண்டு. அவர்களு டைய அபிப்பிராயங்களில் சிலவற்றை எடுத்துக் காட்டுகிற தல்ல. பரிசுத்த ஆவியின் ஏவுதலால் வெளிப்படுத்துவது மட் டும் காட்டுவார்கள். தீர்க்கதரிசனமானது ஒரு காலத்திலும் மனு ஷருடைய சித்தத்தினாலே உண்டாகவில்லை. தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டு பேசி னார்கள் (ii பேது *1:21*)

வேத வசனத்தில் 23 பாகமும் தீர்க்கத்தரிசனம் தான் என் பது அது படிக்கும் போது நமக்கு விளங்குகிறது. அதை ரூபத்தின்படியோ, உதாரணங்களைக் கொண்டோ தந்திருக்க

னாம். அவைகளில் பாதிக்கதிகமானவை இனி மேல் நிறைவேற வேண்டிய காரியங்கள். நடந்த காரியங்கள் எல்லாம் எழுதியிருக்கிறபடி நிறைவேறினவைகள். இனி மேல் நடைபெற உள்ளதும் எழுதியுள்ளபடி நிறைவேறும் என்பது நிச்சயம். அப்படியானால் தேவனின் சித்தம், எதிர்கால காரியங்கள் இவைகளைக் குறித்து அறிய வேண்டுமானால் தீர்க்கதரிசன விஷயங்கள் படித்துதான் அறிய வேண்டும். ஆனால் வேதத்தில் எந்த தீர்க்கதரிசனமும் சுய தோற்றமான பொருளை உடையதாயிராதென்பது நீங்கள் முந்தி அறிந்து கொள்ள வேண்டும். (II பேதுரு 1:20-21) அதாவது எந்தத் தீர்க்கதரிசனமும் அதை மாத்திரம் அர்த்தப்படுத்தி வியாக்கியானப்படுத்தக் கூடியதல்ல. அதைக் குறித்து காட்டியுள்ள எல்லா வேதவாக்கியங்களும் சேர்த்து வியாக்கியானம் பண்ண வேண்டும். அங்கும் இங்குமாக விருப்பம் போல் சில வசனங்களை கூட்டிச் சேர்த்தால் அதில் குழப்பம் நேரிடும். ஆனால் வசனம் நன்றாக சேர்த்துப் படிக்கும் போது கெட்ட உபதேசங்கள் நுழைவதற்கும் யாதொரு ஆதாரங்களும் ஏற்படாது.

தேவன் தீர்க்கதரிசனங்களை ஒழுங்குப்படி சரியான முறையில் எல்லாம் நிறைவேற்றுவார். உதாரணமாகக் கர்த்தர் ஆபிரகாமோடு சொன்னதை பார்ப்போம். அவன் சந்ததி சொந்தமல்லாத தேசத்தில் 400 வருடம் சிறைவாசிகளாக இருந்து அந்த தேசத்தாரை சேவிப்பார்கள். அவர்கள் இவர்களை மிகுந்த உபத்திரவப்படுத்துவார்கள். ஆனால் இவர்கள் சேவிக்கும் ஜாதியை நான் நியாயந்தீர்ப்பேன், அதன் பின் அவர்கள் மிகுந்த கொள்ளையுடைமைகளோடு புறப்பட்டு வருவார்கள். நாலாம் தலைமுறையில் அவர்கள் இவ்விடத்துக்குத் திரும்ப வருவார்கள் என்று தீர்க்கதரிசனமாக சொன்னார். (ஆதி 15:13-16, யாத் 12:35-36) ஆபிரகாமின் சந்ததிக்கு இப்படி சம்பவிக்கும் என்று தேவனுக்குத் தெரியும். ஆகையால் அவர் அவனுக்கு அவிசுவாசமோ, சந்தேகமோ உண்டாக விரும்பவில்லை. அவர் சொன்னபடியே தவறாமல் எல்லாம் நடந்தது. தேவன் யாத்திராகமத்தில் முதல் 12 அதிகாரங்களில் சொல்லியிருக்கிற காரியங்கள் அதற்கு பதில் சொல்லும். எகிப்தில் பார்வோனின் வேலைக்காரரின் தலைவர்கள் இஸ்ரவேலரை செங்கல் வேலையில் கஷ்டப்படுத்தினார்கள். இங்கு வியாக்கி

யானத்திற்கு தேவை இல்லை. தீர்க்கத்தரிசன வியாக்கியான காரியத்தில் தேவனுடைய பிரமாணம் அதன் எல்லா பாகங்களோடும் கூட நிறைவேற வேண்டும் என்பது தான்.

தீர்க்கத்தரிசனத்துக்கு தேவையான ஐந்து காரியங்கள்

1. காரியம் நடக்கும் முன்னே தீர்க்கத்தரிசனத்தில் சொன்னதாக இருக்க வேண்டும்.
2. மனித பார்வைக்கு எட்டாததாக இருக்க வேண்டும்.
3. அது பரிசுத்தமான காரியங்களை வெளிப்படுத்த வேண்டும்.
4. அதை வெளிப்படுத்துவதற்கும், நிறைவேற்றுவதற்கும் இடையில் ஒரு இடைக்காலம் இருக்க வேண்டும்.
5. எல்லா பாகங்களிலும், காரியங்களிலும் இந்தத் தீர்க்கத் தரிசனம் நிறைவேறவும் வேண்டும்.

உதாரணமாக இயேசு கிறிஸ்துவின் பிறப்பாகிய முதல் வருகையைப் பற்றி சில காரியங்கள் சொன்னவை எல்லாம் அப்படியே தெளிவாக நிறைவேறியிருக்கிறது.

1. 30 வெள்ளிக் காசுக்கு விற்றார்கள். *(சகரியா 11:12)*
2. சிநேகிதன் காட்டிக் கொடுப்பான். *(சங் 41:9)*
3. சீஷர்களால் கைவிடப்படுவார். *(சக 13:7)*
4. பொய் சாட்சிகளால் குற்றம் சுமத்தப்படுவார். *(சங் 35:11)*
5. குற்றம் சுமத்துகிறவர்கள் முன்னில் வாய் திறவாதிருந்தார். *(ஏசா 53:7)*
6. உமிழ் நீர் ஏற்றார். *(ஏசா 50:6)*
7. கையும், காலும் துளைக்கப்பட்டார். *(சங் 22:16)*
8. அங்கியைக் குறித்து சீட்டுப் போட்டார்கள். *(சங் 22:18)*

9. சத்துருக்கள் பரியாசம் பண்ணுவார்கள். (சங் 22:6-8)

10. கசப்பு காடி குடிக்க கொடுத்தார்கள். (சங் 69:21)

11. அக்கிரமக் காரருக்காக வேண்டிக்கொண்டார். (ஏசா 53:12)

12. எலும்புகள் ஒன்றும் முறிக்கப்படுவதில்லை. (சங் 34:20)

13. அக்கிரமக் காரரில் ஒருவராக எண்ணப்பட்டார். (ஏசா 53:12)

14. கைவிடப்பட்டதினால் கதறினார். (சங் 22:1)

15. அவரது விலாவைக் குத்தி துளைத்தார்கள். (சகரியா 12:10)

16. ஐசுவரிய வானோடு அடக்கம் பண்ணப்பட்டார். (ஏசா 53:9)

இவைகள் ஏறக்குறைய 600 வருடங்களுக்கிடையில் பலரைக் கொண்டு எழுதப்பட்டது. இது இயேசு கிறிஸ்துவுக்கு 1000 வருடத்துக்கு முன் வெளியாக்கப்பட்டது. இவை எல்லாம் இயேசு கிறிஸ்துவை மறுதலித்தல், சிலுவையில் அறைதல் என்பவற்றைக் குறித்து தெளிவாக வெளிப்படுத்தப்படுகிறது. இவைகளைப்பற்றிச் சொன்ன தீர்க்கதரிசிகள் எல்லாரும் பரிசுத்த ஆவியின் ஏவுதலால் ஏவப்பட்டும், ஆளப்பட்டும் இருந்தார்கள் என்பது நமக்கு ஏற்றுக் கொள்ளாதிருக்க வழியில்லை.

வசனம் சரியாகப் பிரித்து எடுக்க வசனம் சரியாக படித்தவர்களுக்குத் தான் கூடும். வேத வாக்கியங்கள் எல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது. தேவனுடைய மனிதன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்ய தகுதியுள்ளவனாகவும் இருக்கும் படியாக அவைகள் உபதேசத்துக்கும், கடிந்து கொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பித்தலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது. (II தீமோ 3:16-17) நமது படிப்பிற்காக இங்கு எழுதப்பட்டிருப்பது யாவும் நமக்குள்ளதல்ல. ஒரு பங்கு யூதருக்கும், மற்

றொரு பங்கு ஜாதிகளுக்கும், வேறொரு பங்கு சபைக்கும் உரியதாகும். யூதர்கள், ஜாதிகள் இவர்கள் வேறு வேறு வித்தியாசமுள்ளவர்கள். இவர்கள் சேர்ந்து ரூபம் பெற்றுக் கொண்டது தான் சபை. (எபே 1:22-23) (கொலோ 1:18; கலா 3:27-28) (கொலோ 3:10-11) சபை என்பது தீர்க்கத்தரிசன விஷயம் அல்ல. தனிமையான வெளிப்படுத்தலில் உட்பட்டவர்கள். யூதர்கள், பலஸ்தீனா, எருசலேம், மேசியா என்பவையாகும். பழைய ஏற்பாட்டில் சபை என்பது காணப்படவில்லை. அது ஜாதிகளையோ, யூதர்களையோ மட்டும் சிந்திக்கிற விஷயம். சபையைக்குறித்து படிக்க வேண்டுமானால் நமது சிந்தை புதிய ஏற்பாட்டிற்கும், அப்போஸ்தல நடபடிகளுக்கும், நிருபங்களுக்கும் திரும்ப வேண்டியது தான். தேவனுடைய தெரிந்தெடுக்கப்பட்ட இஸ்ரவேலின் சரித்திரம் வேத புஸ்தகம் முழுவதிலும் சேர்க்கப்பட்டிருக்கிறது. ஆபிரகாமின் அழைப்பு முதல் இன்று வரையுள்ள சரித்திரம், அவர்கள் திரும்பவும் ஒன்று சேர்தல், மனந்திரும்புதல். சொந்த நாட்டிற்குள் பிரவேசித்தல். அவர்களுடைய உலக பிரகாரமான எதிர் கால மேன்மை இவையெல்லாம் தீர்க்கத்தரிசன விஷயம் தான் ஜாதிகளுடைய ராஜ்யங்களின் சரித்திரம் தானியேலின் புத்தகத்தில் சேர்க்கப்பட்டிருக்கிறது. அந்த புத்தகம் தான் நமது பாட விஷயம். இந்த மோசமான காலத்தையும் அதன் முடிவையும் பற்றி தீர்க்கத்தரிசன விஷயத்தில் கூறப்பட்டிருக்கிறது.

ஆகையால் இனி பூமியில் சம்பவிக்க வேண்டிய காரியங்களை, அறிய விரும்புகிறவர்களுக்கும் படிக்கிறவர்களுக்கும் இதனால் பல தேவைகள் இருக்கிறது. எதிர்காலத்தைக் குறித்து நிச்சயிக்க மிகவும் திட்டமான தீர்க்கத்தரிசன வாக்கியத்தை விட்டு விட்டு, இந்தக் காலத்து மனிதர் ஜோசியர்களையும், குறி சொல்லுகிறவர்களையும் அடைக்கலம் தேடுகிறார்கள். தீர்க்கத்தரிசனம் படிக்க சோம்பேறித்தனம் கொள்வதினால் வேத வசனத்தின் தீர்க்கத்தரிசன அறிவு குறைவுபட்டுப் போகவும், தெய்வீகம் இல்லாமையும் , நாஸ்தீகக் கொள்கையும் அதிகமதிகம் வளர்ந்து வரவும் செய்கிறது. தீர்க்கத்தரிசனம் படிப்பதின் குறைவின் நிமித்தம் தேவனுடைய யுக சம்மந்தமான சம்பவங்களும், எண்ணங்களும் மனிதனுக்கு சிந்திக்க முடியவில்லை. இதினிமித்தம் சகல பொய்யின் முக்கிய இடங்களுக்கும், மோசமான மதாச் சாரங்களுக்கும் மனிதன்

சம்மந்தப்படுகிறான். இந்தக் காலங்களின் பிரதிவாதங்களுக்கு ரிய ஒரு மருந்து தரிசனம் படிக்கிறது மாத்திரம் தான். இப் போது நாம் படிக்கப் போகிற புஸ்தகம் ஜாதிகளின் ராஜ்யங்க ளைக் குறித்தும் அவர்களின் கடைசி நாளில் பெரிய ஆளுகை யின் நாயகனாகிய அந்திக் கிறிஸ்துவைப்பற்றியுள்ள தீர்க்கத்த ரிசனம் மட்டும்தான்.

தானியேலின் தீர்க்கத்தரிசனத்தைப் பற்றிய சிறு உரை

தானியேலின் புத்தகம் போல் வேத புத்தகத்தில் சிந் தைக்கு இடம் கொடுக்கும் ஒரு புத்தகம் வேறே இல்லை. 3-ம் நூற்றாண்டில் சீரியாவிலுள்ள ஒரு நிருபர் இதைப்பற்றி சிந் திக்க ஆரம்பித்தது முதல் இந்த புத்தகம் கடந்த 1600-க்கு அதிகமான வருடங்களாக தேவன் இல்லையென்று வாதிக்கிற வர்களால் பந்தாடப்படுகிறது. B.C 533-ல் தானியேல் இதை எழுதினான் என்பது பொய்யென்றும், B.C 168-ல் மக்காபியரு டைய காலத்தில் அவர்கள் எழுதினார்கள் என்பது சரி என்றும் அபிப்பிராயப்படுகிறார்கள். அந்தியோக்கியஸ் எப்பிப்பா னோஸிக்குப் பிறகு வாழ்ந்திருந்த ஒரு பக்தனாகிய யூதன் இதை எழுதினான் என்றும் சொல்லுகிறார்கள். இப்படி ஒரு புத்தகம் எழுதி மற்றவர்களை தப்பிதமான வழியில் கொண்டு செல்ல பிரயாசப்படும் ஒருவனை எப்படி பரிசுத்தவானாகிய ஒரு யூதன் என்று சொல்லமுடியும். இப்புத்தகத்தில் எதிர்காலத் தைக் குறித்துச் சொல்வதால் அது ஏற்றுக் கொள்ளப்பிரியமில் லாதவர்கள் எவ்வளவு தூரம் எல்லை கடந்து போவார்கள் என்று இதிலிருந்து நாம் சிந்திக்க முடியும்.

B.C 175-165 வரை அந்தியோக்கியஸ் எப்பிப்பானோஸ் ஜீவித்திருந்ததற்கு முன் தானியேலின் புத்தகம் இருந்ததாக பல தெளிவுகள் உண்டு. B.C 285-ல் எழுதி தீர்ந்த செப்ருஜின் என்றவரின் கிரேக்கு மொழிபெயர்ப்பில் இந்த புத்தகம் எப் படி இருந்தது என்று எழுதப்பட்டுள்ளது ஒரு யூத பக்தன் எழுதினான் என்று சொன்னதற்கு 100வருடத்துக்கு முன்னே B.C 285-ல் ஜோசப் என்ற யூத சரித்திரக்காரன் ஆபிரகாமின் காலம் முதல் A.D 70 வரையுள்ள யூத ஜாதிகளின் சரித்திரத்தை எழுதினான். 408 வருடங்களுக்கு முன் எழுதப்பட்ட தானியே லின் சரித்திரத்தில் சொல்லியிருக்கிறுக்கிறது போல் அந்தி

யோக்கியஸ் எப்பிப்பானோஸோடு கூட உள்ள எதிர்ப்பின் காரியங்கள் நிறைவேறினது. இதிலிருந்து நாம் சிந்திக்க வேண்டியது என்னவென்றால் ஜோசப்பின் சரித்திரப்பிரகாரம் தானியேலின் சரித்திரம் B.C 573-ம் ஆண்டின் இடைப்பகுதி யில் எழுதப்பட்டது என்பதுதான். தானி 8:5-8 சொல்லப்பட்டி ருக்கும் மகாபெரிய அலெக்சாண்டர் B.C 382-ல் தனது படை யெடுப்பின் காலத்தில் எருசலேமில் வந்தார். அப்போது யத்வா என்ற பிரதான ஆசாரியன் தானியேல் தீர்க்கதரிசனத்தி லிருந்து அவனைக் குறித்துள்ள காரியங்கள் அலெக்சாண்ட ரைக் காட்டினாரென்றும், அதினால் அவன் அதை அழிக்கா மல் விட்டு மாறினான் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இதனால் தானியேல் தீர்க்கத்தரிசனம்B.C 332-க்கு முன்னே எழுதினது என்று அறிந்து கொள்ளலாம்.

மட்டுமல்ல! எசேக்கியேலும், தானியேலும் சம காலத்த வர்களாக இருந்தார்கள். எசேக்கியேல் பாபிலோனில் வைத் துத்தான் தனது பேரில் உள்ள எசேக்கியேல் தீர்க்கத்தரிசனம் எழுதினான். அவனோடு கூட இருந்த அடிமைகள் மிகவும் அதிகமாய் அவனை கனப்படுத்தினார்கள். அவனுடன் பல காரியங்கள் ஆலோசித்து வந்தார்கள். தானியேல் பாபிலோ னில் மிகவும் உன்னதமான நிலமையில் இருந்தான் என்றால் எசேக்கியேலுக்கு அது நிச்சயம் தெரிந்திருக்க வேண்டியது. ஆகையால் தானியேலைக் குறித்து எதாவது விசேஷமாக சொல்லத் தேவை இல்லை. ஆனால் அவன் சொல்லியிருக்கி றான். தானியேலின் பெயரை எசேக்கியேல் மூன்று தடவை தனது தீர்க்கத்தரிசனத்தில் காட்டியிருக்கிறான். நோவா,தானி யேல்,யோபு என்ற மூன்றுபேரும் அதில் உண்டாயிருந்தாலும் அவர்கள்தங்கள் நீதியால் தங்கள் சொந்த ஜீவனை மட்டும் இரட்சிக்க முடியும் என்று கர்த்தர் அருளிச்செய்கிறார். எசேக் 14:14:14:20:28:3 இதனால் தானியேல் என்று ஒருவன் இருந் தான் என்று எசேக்கியேல் சாட்சி கூறுகிறான். நீதியின் காரியத் தில் நோவாவைப் போலவும், ஞானத்தில் யோபைப் போல வும் இருந்தார்கள் என்றும் தெரிகிறது.

ஆனால் இந்த புத்தகத்தின் அதிகாரத்தையும், உண்மையை யும், குறித்து ஒலிவமலையில் வைத்து நயது கர்த்தர் தாமே இப்படி சொல்லியிருக்கிறார். மேலும் பாழாக்குகிற அருவருப் பைக் குறித்து தானியேல் தீர்க்கத்தரிசி சொல்லியிருக்கிறான்.

வாசிக்கிறவன் சிந்திக்க கடவன். நீங்கள் அதை பரிசுத்த ஸ்தலத்தில் நிற்கக் காணும் போது யூதேயாவில் இருக்கிறவர்கள் மலைகளுக்கு ஓடிப் போகக்கடவர்கள். (மத் 24:15:16) ஆகையால் தானியேல் புத்தகத்தின் உண்மையை அவமதிக்கிறவன் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சத்தியத்தையும், ஞானத்தையும் அவமதிக்கிறான். ஏனென்றால் முன் சொன்ன வேதபாகம் தானியேல் என்ற தீர்க்கதரிசி வாழ்ந்திருந்தார் என்பதற்கு நல்ல சாட்சியாக இருக்கிறது. பாழாக்குகிற அருவருப்பு தேவாலயத்தின் பரிசுத்த ஸ்தலத்தில் நிற்கிறது என்று வாசிக்கிறோம்.

தானியேலின் பெயர் ஞாபகச் சின்னங்களிலோ, சரித்திரங்களிலோ காணாதிருக்கிறபடியால் இவ்வளவு அதிகாரமும், சயாதினமும் பெற்ற ஒரு மனிதன் பாபிலோனில் ஜீவித்திருக்கவில்லை என்று சிலர் சொல்லுகிறார்கள். காரணம் மிகவும் கொஞ்சம் ரிக்கார்டுகள் மட்டும் கண்டுபிடித்து எடுககப்பட்டன. அதில் தானியேலின் பெயர் காணவில்லை என்பது பற்றி கூறுவது ஒரு பெரிய காரியம் அல்ல; மற்றொரு காரியம் தானியேல் என்றுள்ள யூத நாமம் பெல்தெஷாத்சார் என்றுள்ள புறஜாதிப்பெயராக மாற்றி பெல்லஸர் என்ற பெயர் சுருக்கிமற்றுவிதத்தில் உச்சரிக்கவும் வழியுண்டு. நீண்ட பெயர் சொல்லும் போது அப்படி செய்வது பழக்கம் தானே. உதாரணமாக (லூக் 2:41-50 வரையுள்ள பாகத்தில்) இயேசு 12 வயது பருவத்தில் பஸ்கா பண்டிகை சமயத்தில் எருசலேமிற்கு போனதாக வாசிக்கிறோம். அது முதல் தனது வெளியரங்கமான ஊழியத்தின் காலம் வரை அவர் யாதொரு ஊழியத்திற்கும் போயிருக்கமாட்டாரா? நமக்கு தெரியாது. வேத புஸ்தகத்தில் அந்த சமயம் மௌனமாக விடப்பட்டிருக்கிறது. யோவான் எழுதின சுவிசேஷத்தில் தமது ஞானஸ்நானத்திற்கு பிறகு அவர் பழக்கமாக பஸ்கா பண்டிகைக்கு போயிருந்தார் என்பது தெளிவாயிருக்கிறது. பண்டிகைகளில் ஆண்கள் எல்லாம் பங்கெடுக்க வேண்டுமென்று சட்டம், இதிலிருந்து அவர் அதற்கு முன்பும் போயிருந்தார் என்பது தெளிவாகிறது கோட்டைகளும், பாலங்களும் தேவாலயங்களும், மகாபாபிலோனில் அரண்மனைகளும் செய்த எஞ்சினியர்மார் என்பவர்களுடைய பெயர்கள் எங்கும் எழுதிவைக்கவில்லை. ஆகையால் தானியேலிற்கு மட்டும் பெயர் பொறிக்காததில் ஆச்சரியப்படத் தேவையில்லை.

தானியேலின் புத்தகத்திற்கு குற்றம் சொல்வதின் காரணம் நேபுகாத்நேச்சாருக்கும், பெல்ஷாத்சாருக்கும் இடையிலுள்ள ராஜாக்களுடைய பெயர் சொல்லவில்லை என்பது அதில் நேபுகாத்நேச்சாரின் மரண சமயம் தானியேல் உன்னத அனுபவத்திலிருந்து மாற்றப்பட்டான் என்றும் பெல்ஷாத்சாரின் சொப்பனம் வியாக்கியானம் பண்ணவேண்டிய சமயம் வரை திரும்பவும் அவன் வெளிப்படவில்லை என்றும் தெரிகிறது. ஆகையினால் தனது புத்தகத்தோடு சேராத சம்பவங்களை அவன் தனது புத்தகத்தில் காட்ட தேவையில்லை.

பதினைந்து பெர்ஷியன் பதங்களும், மூன்று கிரேக்க பதங்களும் தானியேலின் புத்தகத்தில் சொல்லியிருக்கிறதினால் B.C533-ல் இந்த புத்தகம் எழுதியிருக்க முடியாது என்று சிலர் எண்ணுகிறார்கள். ஆகையால் இந்த பதங்கள் உள்ள இந்த புத்தகம் முன்கூட்டி எழுதினது என்பது தெரிகிறது. அந்தியோக்கியஸ் எப்பிப்பானோசுடைய காலத்தில் இது எழுதப்பட்டது என்றால் இதன் எழுத்தாளர் சில கிரேக்க பதங்கள் மட்டும் அல்ல. பல கருத்துக்களும் கூட இதில் சேர்க்க வசதியிருந்தது. இங்கே உபயோகித்திருக்கும் கிரேக்க பதங்கள் பல சங்கீத உபகரணங்களின் பெயர்களாக இருந்தது. ஒன்றில் இது நேபுகாத் நேச்சார் கிரிஸில் இருந்து கொண்டு வந்ததோ அல்லது யுத்தத்தில் சிறை பிடிக்கப்பட்ட கிரேக்க சங்கீதக்காரர்கள் உபயோகித்ததாகவோயிருக்க வேண்டும். மற்ற ராஜ்யத்திலிருந்து பெரிய பெரிய பிரபுக்கள் சந்திக்க வந்து கொண்டிருந்த ராஜதானியில் தானியேல் இருந்ததினால் மற்றும் தேச பதங்கள் உபயோகிக்க ஏராளம் அவசியம் தானியேலுக்கு ஏற்பட்டிருக்க வேண்டும்.

வசனத்தின் விபரங்கள்

புத்தகத்தின் முதலாம் அதிகாரம் நான்காம் வாக்கியத்தில் அஸ்பேனாஸ் என்ற பிரதானிகளின் தலைவனைக் குறித்து வாசிக்கிறோம். மூல பாஷையில் இதற்குள்ள பதம் ருபசாரிஸ் என்பதாகும். ஆனால் ஏறக்குறைய 25 வருடங்களுக்கு முன்பு வரை இந்த வார்த்தை பாபிலோனில் உள்ள ஞாபக சின்னங்களில் காணவில்லை. இதன் ஆரம்பத்தில் நேபுகாத்நேச்சாரின் ராஜ்யத்தில் இப்படிப்பட்ட ஒரு மனிதன் இருக்கவில்லை

என்பது தெரிகிறது. ஆனால் தானியேலின் புத்தகம் உண்மை சம்பவம் என்று கோணம் அளவிலுள்ள ஒரு செங்கல்லில் தானியேலின் பெயர் கண்டு பிடிக்கப்பட்டதிலிருந்து திட்டமாயிற்று. இப்போது அது பிரிட்டிஷ் பொருட்காட்சி சாலையில் பத்திரப்படுத்தப்பட்டிருக்கிறது. இதனால் தானியேலின் காரியம் உண்மை என்பது தெளிவாயிற்று. வேத வசனத்தில் ஆவியானரின் ஏவுதலும், பாதுகாத்தலும் என்ற ஜோண் உர்க்காகர் என்பவரின் புத்தகத்தில் 358-359 பக்கங்களில் இந்த காரியங்கள் காணலாம். ஒன்றும் இரண்டும் அதிகாரங்களில் நேபுகாத்நேச்சார் எருசலேமில் உள்ள தேவாலயத்தின் பாத்திரங்களை சிநேயார் தேசத்திலுள்ள அவனுடைய தேவனின் க்ஷேத்திரத்தில் கொண்டு போனதைப்பற்றி சொல்லப்பட்டிருக்கிறது. நேபுகாத்நேச்சாரின் காலத்தில் எழுதப்பட்ட ஒரு நிரூபத்திலிருந்து, அவன் யுத்தம் செய்த ராஜ்யங்களிலிருந்து கிடைத்த பொருட்களில் விலையேறியதை அவனுடைய க்ஷேத்திரத்தில் கொண்டு வைக்கிறது அவனுக்கு பழக்கமாக இருந்ததாக தெரிகிறது. 400 வருடங்களுக்கு பிறகு உள்ள ஒரு எழுத்துக்காரன் நேபுகாத்நேச்சாரின் காரியங்கள் தெரியாத ஒரு ஆளாக இருந்தால் அவன் இப்படி இருந்தான் என்று எப்படி அவனைக் குறித்து விசேஷமாக எழுத முடியும்.

ஒரு எழுத்தாளர் எழுதாமல், நஷ்டப்பட்ட ராஜ்யத்தின் நிலைமையை சாதாரண சிந்தைகளின் அஸ்திபாரத்தில் எப்படி எழுத முடியும். ஒரு வேளை எழுதினாலும் இவ்விதம் ஆலோசனை செய்ய முடியாது.

புற ஜாதிகளுடைய ராஜ்யங்கள்

ஜாதிகளுடைய காலத்தைக் குறித்து தானியேலின் புத்தகத்தில் வாக்குவாதம் செய்தாலும், எல்லா புற ஜாதிகளையும் குறித்துள்ள தெளிவுகள் தரவில்லை. தீர்க்கத்தரிசன காலத்தில் உள்ள பூமியின் ஜாதிகளைக்குறித்து மட்டுமே தரப்பட்டுள்ளது. அல்லது பழைய ரோம் சாம்ராஜ்யத்தில் உட்பட்டிருந்த பூ பாகம் மட்டுமே உட்படுத்தியிருக்கிறது. பல வித ஜாதி ராஜ்யங்கள் தம்மில் உள்ள ஐக்கியத்தைப்பற்றி வேத வசனத்தில் சேர்க்க தேவையில்லை. ஆனால் அப்படிப்பட்ட புற ஜாதிகளுக்கு பரிசுத்த நாட்டின் மேலும் இஸ்ரவேலின் மேலும் உள்ள ஐக்கியத்தைப்பற்றி சொல்லப்பட்டிருக்கிறது.

உன்னதமானவர் ஜாதிகளுக்கு சுதந்தரங்களை பங்கிட்டு, ஆதாமின் புத்திரரை வெவ்வேறாய் பிரித்த காலத்தில், இஸ்ரவேல் புத்திரருடைய தொகைக்குத்தக்கதாய், சர்வ ஜனங்களின் எல்லைகளை திட்டம் பண்ணினார். (உபா 32:8) யூதன் தான் எல்லா தீர்க்கதரிசனத்திற்கும் உள்ள திறவு கோல். யூத ஜாதி தேவனை தள்ளி விடாதிருக்கவும், அவருடைய ஓய்வு நாட்களை அசட்டை பண்ணாதிருக்கவும் செய்திருந்தால் ஜாதிகளுடைய காலம் என்று ஒன்று ஏற்பட்டிருக்காது. தேவன் இஸ்ரவேல் ராஜாக்களின் கையிலிருந்து புற ஜாதி ராஜாவான நேபுகாத்நேச்சாருடைய கையில் உலகத்தின் ஆளுகையை ஒப்புவித்தது முதல் ஜாதிகளுடைய காலம் ஆரம்பித்தது. இன்னும் இஸ்ரவேல். ஜாதிகளுடைய தலைமையில் ஆகிற நாள் வரை அது தொடரும்.

ஜாதிகளுடைய காலத்தை குறித்து சொல்லுகிற தீர்க்கதரிசி தான் தானியேல். மேசியாவினுடைய அல்லது ஆயிரம் வருட அரசாட்சியின் காலம் வரையுள்ள உலகராஜ்ஜியங்களின் மொத்தத்தில் உள்ள ஆளுகையைக் குறித்து தானியேல் தரிசனம் காண்கிறான். தானியேல், ஏசாயா, எரேமியா, எசேக்கியேல் என்பவர்களைப் போலவோ மற்ற சின்ன தீர்க்கத்தரிசிகளைப் போலவோ உள்ள ஒரு தீர்க்கத்தரிசி அல்ல. அந்த தீர்க்கத்தரிசிகள் ஜனத்தை சந்தித்து தேவனுடைய வெளிப்படுத்தல்களை தெரிவித்து வந்தார்கள். ஆனால் தானியேலோ தரிசனங்கள் வழியாக அவனுக்கு வெளிப்பட்டு கிடைத்ததை அறிவித்தான். அவனுக்கு தீர்க்கத்தரிசனத்தைப் பற்றி கூடுதலான மேன்மை இல்லாவிட்டாலும் தீர்க்கத்தரிசனத்தின் ஆவியானவர் அவனோடு கூட இருந்தார். தானியேலின் புத்தகம் பழைய ஏற்பாட்டின் ஒரு வெளிப்படுத்தல் புத்தகம் ஆகும். வெளிப்படுத்தின விசேஷம் புதிய ஏற்பாட்டில் உள்ளது. இது இரண்டும் சேர்த்து படிக்காமல் காரியங்கள் சிந்திக்க மிகவும் கஷ்டம். தானியேலின் புத்தகத்தில் தானியேலை ''மூன்றுசடவை'' மிகவும் பிரியமான புருஷன் என்று கூப்பிட்டிருக்கிறது. அதுபோல் அப்போஸ்தலனாகிய யோவானையும் மிகவும் பிரியமான சீஷன் என்று கூப்பிட்டிருக்கிறதைக் காணலாம். இந்த இரண்டு பேருக்கும் தான் B.C 606 முதல் கிறிஸ்துவின் இரண்டாம் வருகை வரையுள்ள தரிசனங்கள் காணும்படி உள்ள பாக்கியம் கிடைத்தது.

புத்தகப் பிரிவுகள்

ஆறு அதிகாரம் உள்ள இரண்டு பாகங்களாய் புத்தகம் பிரிக்கப்பட்டிருக்கிறது. 1.சரித்திர பாகம். 2. தீர்க்கத்தரிசன பாகம் இந்த புத்தகம் இரண்டு பாஷைகளி ல் எழுதப்பட்டுள்ளது. முதல் அதிகாரமும் இரண்டாம் அதிகாரத்தின் முதல் மூன்று வசனங்களும் எபிரேய பாஷையில் எழுதியிருக்கிறது. எட்டு முதல் பன்னிரண்டு வரையுள்ள அதிகாரங்களும் அப்படித்தான். ஆனால் இரண்டாம் அதிகாரத்தின் நான்காம் வாக்கியம் முதல் 7-ம் அதிகாரத்தின் கடைசி வாக்கியம் வரை சீரியருடைய ஆதி பாஷையான அராமி பாஷையில் எழுதப்பட்டுள்ளது. அராமி பாஷைக்கும் முற்கால பாபிலோனிய பாஷையான கல் தேய பாஷைக்கும் தம்மில் சம்மந்தம் உண்டு.இது அந்த காலத்தில் உள்ள தேசிய பாஷையாய் இருந்தது. இந்த இரண்டு பாஷைகளும் மிகவும் தேவையாக உள்ளது. புறஜாதி சாம்ராஜ்யங்களை ஒட்டின காரியங்கள் அராமி பாஷையிலும், யூதர்களை சம்மந்தித்த காரியங்கள் எபிரேய பாஷையிலும் எழுதப்பட்டுள்ளது.இதிலிருந்து அறிந்து கொள்ள வேண்டியது இந்த புத்தகம் பாபிலோனில் வைத்து ஒரு யூதனால் எழுதப்பட்டது. இந்த புத்தகத்தில் உள்ள எபிரேய பாஷை எசேக்கியேலிலுள்ள எபிரேய பாஷைக்கு ஒத்திருக்கிறது. எசேக்கியேல் தானியேல் ஜீவித்திருந்த அதே காலத்தில் பாபிலோனில் அடிமையாய் இருந்தவன்.

தானியேலைப்பற்றிய விபரங்கள்

மற்ற தீர்க்கத்தரிசிகளை விட கூடுதல் காரியங்கள் நமக்கு தானியேலைக்குறித்து அறியலாம். இவன் யூதா கோத்திரத்தைச் சேர்ந்தவன், இவன் ராஜ சந்நிதியில் எப்போதும் இருந்தான். நேபுகாத்நேச்சார்B.C 606 -ல் யூதேயாவில் படையெடுத்த போது இவனை அடிமையாக்கிக் கொண்டு போனான். இவனை பாபிலோனுக்கு கொண்டு போகும் போது இவனுக்கு வயது 17 ஆக இருந்திருக்கலாம். சீக்கிரத்தில் ராஜ்யத்தில் மிகவும் உயர்ந்த பதவியில் இவன் உயர்த்தப்பட்டான். நேபுகாத்நேச்சாரின் காலம் முழுவதும் அந்த ஸ்தானத்தில் இவன் இருந்தான். நேபுகாத்நேச்சார் மரித்த போது தானியேல் அந்த ஸ்தானத்தை விட்டு நீக்கப்

பட்டான். அதற்கு பின்பு பெல்ஷாத்சாரின் அழிவைக்குறித்து சொல்ல அழைக்கப்பட்டது வரை இடையில் உள்ள ஒரு காரியமும் இவனைப்பற்றி தெரியவில்லை. 70 வருஷம் பாபிலோனில் ஜனம் அடிமைகளாக இருந்த காலம் வரையும் தானியேல் வாழ்ந்திருந்தான்.

120 ராஜ்யங்களின் பிரதான ஆளுகைக் கர்த்தனாய் ஏறக்குறைய இவனுடைய 90 வயது வரை, அதாவது மேதியனாகிய தரியு ராஜாவின் காலம் வரை இவன் இருந்தான். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைத்தவிர, குற்றமற்றவராக வேத புத்தகத்தில் காண்கிறவன் இவன்தான். இவனுடைய ஜீவியத்தில் ஒரு குற்றமும் காணமுடியவில்லை. கர்த்தருக்கு மிகவும் பிரியம் உள்ளவானாயிருந்து இவன் ராஜாக்களோடும், ராஜ்யத்தின் பிரபுக்களோடும், சமத்துவமாய் ஜீவித்தான். பொது சபையில் இவன் காரியங்களை நடப்பித்து வந்தான். இவனுக்கு பெரிய உத்தியோகம் இருந்த போதிலும் இவன் மேல் யாதொரு குற்றமும் காணப்படவில்லை இவன் தேவனுடைய தூதர்களுடன் பேசினான். கர்த்தர் தாமே இவனுக்கு நேரில் தரிசனமானார். இவனுடைய பெயர் புதிய ஏற்பாட்டில் உள்ள விசுவாசிகளின் பட்டியலில் சேர்க்கப்படா விட்டாலும் இவன் மிகவும் பெரிய ஒரு விசுவாசியாய் இருந்தான். சிங்கங்களின் வாயை அடைத்தார்கள் என்று சொல்லப்பட்டிருப்பது இவனைக் குறித்துதான். (எபிரேயர் 11:33) இவன் அந்த காலத்தில்தான் ஜீவித்திருந்தான்.

காலத்தினுடைய குறிப்புகள் பற்றி படிக்க உள்ள சந்தர்ப்பம் இவனுக்கு கிடைத்தது. உலக நாகரீகத்தின் உற்பத்தி ஆரம்பித்ததும் ராஜ்யங்களின் சக்திகள் குறைய ஆரம்பித்தது. களிமண் போன்ற சோஷியலிசம் மற்றும் பல இசங்கள் எழும்பி கொஞ்சம், கொஞ்சமாய் ராஜ்யங்கள் தோல்வியடைந்தது. அவைகளுக்கு பெலன் இல்லாத நிலைமையில் ஆனதும் இப்படி தாறுமாறாக்கப்பட்ட உலகத்துக்குள்ள ஏக இரட்சிப்பின் வழி, இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலும், அவருடைய ஆயிரம் வருட அரசாட்சி மட்டும் என்பது இவன் சிந்திக்க ஏதுவாயிற்று.

தானியேல் தீர்க்கத்தரிசன விளக்க உரை
இதில் அடங்கிய சரித்திரமும், தீர்க்கத்தரிசனங்களும்

தானியேலின் தீர்க்கத்தரிசனம் நாம் வாசிக்கும்போது இதில் இரண்டு பகுதிகள் அடங்கியுள்ளன. முதல் பகுதியில் தானியேலைக் குறித்தும் தோழர்களைக் குறித்தும், இரண்டாம் பகுதியில் தானியேல் கண்ட தரிசனங்களைப்பற்றியும் கூறப்பட்டுள்ளது.

இந்த புத்தகத்தின் சுருக்கம் என்னவென்றால் யோயாக்கீம் யூதாவுக்கு ராஜாவான மூன்றாம் அல்லது நான்காம் வருடத்தில் B.C 606-ல் நேபுகாத் நேச்சார் எருசலேம் பட்டணத்தை முதல் முதல் பிடித்த போது தானியேலும், அவனைப்போல், சில உயர் குல வாலிபர்களும் சிறைபிடிக்கப்பட்டு, பாபிலோனுக்கு வந்தார்கள். மூன்று வருடமாக தானியேலும், அனனியா, மீஷாவேல், அசரியா என்ற அவனது தோழர்களுடன் கல்தேயக் கல்வியைக் கற்று அவர்கள் ராஜாவினிடம், வேலை பார்ப்பதற்குரிய அறிவும், திறனும் உடையவர்கள் ஆனார்கள். தாங்கள் விக்கிரக ஆராதனைககடுத்த காரியத்தில் தீட்டுள்ளவர்கள் ஆகாதபடிக்கு தேவ பக்தியுள்ள அந்த நான்கு வாலிபரும் ராஜாவின் விருந்தில் பங்கு கொள்ளாதிருந்தனர்.

தானியேலும் மற்ற மூன்று பேரும் கல்தேய பாஷை கற்றபின் கல்தேய ஞானிகளைவிட மிக சமர்த்தர்களாக இருந்தார்கள். நான்கு பேருக்கும் பாபிலோனில் நல்ல வேலை கிடைத்தது.(தானி 1:20) சொப்பனங்களை வியார்த்தி செய்ய கர்த்தர் தானியேலுக்கு விசேஷித்த ஞானம் அளித்திருந்தார். தானியேல் நேபுகாத் நேச்சாரின் சொப்பனத்துக்கு அர்த்தம் சொன்னபடியால் நேபுகாத் நேச்சார் அவனை மற்றெல்லா சாஸ்திரிகளுக்கும் தலைவனாக ஆக்கினான். தானியேலின் வேண்டுதல்படி மற்ற மூன்று பேரையும் மாகாணத்துக்காரியங்களை விசாரிக்கும்படி ராஜா வைத்தான்.(தானி 2:49)

மூன்றாம் அதிகாரத்தில் பாபிலோன் ராஜா தானியேலையும், அவன் தோழர்களையும் தான் உண்டு பண்ணின சிலையை வணங்கச் சொன்னதும், அவர்கள் கர்த்தரை மறுதலியாததும், கர்த்தர் அவர்களை ஆச்சரியமாக காப்பாற்றியதும் சொல்லப்பட்டிருக்கிறது.

நான்காம் அதிகாரத்தில் நேபுகாத்நேச்சார் கண்ட சொப்ப னமும், ஐந்தாம் அதிகாரத்தில் பெல்ஷாத்சார் செய்த விருந் தும், சுவரில் காணப்பட்ட கையெழுத்தும், சொல்லப்பட்டி ருப்பதுமன்றி அந்த சொப்பனமும், கையெழுத்தும் இந்த ராஜாக்களின் பெருமையினால் வந்த அழிவைக் காண்பிக்கி றது என்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

ஆறாம் அதிகாரம் சிங்கக்கெபியில் தானியேல் காட்டின தைரியத்தையும், அவன் விடுவிக்கப்பட்டதையும் காண்பிக்கி றது.

ஏழாம் அதிகாரத்தில் தானியேல் கண்ட நான்கு பெரிய மிருகங்கள், நான்கு பெரிய உலக ராஜ்யங்களாகிய கல்தேய, பெர்சிய கிரேக்கு, ரோம் ராஜ்யங்கள் ஒன்றுக்கு பின் ஒன்றாக மேம்பட்டு வருவதையும் அவைகள் அழிவுக்குட்படுவதை யும் குறிக்கிறது. 8-ம் அதிகாரம் முதல் 12-ம் அதிகாரம் வரையி லுள்ளது இரண்டாம் பாகம். அதில் மூன்று தரிசனங்கள் சொல் லப்பட்டுள்ளது. மேலும் தானியேல் 9-ம் அதிகாரம் யூத ஜாதி கர்த்தருக்கு விரோதமாக செய்த பாவங்களுக்காக மனஸ்தாபப் பட்டு, அறிக்கையிட்டு, எரேமியா தீர்க்கத்தரிசி முன் சொன்ன படி அவர்கள் பாபிலோனில் சிறையாகி 70 வருடம் முடிந்த பின்(எரேமி 21:10;25:11) பாழாய்கிடந்த எருசலேம் பட்டணத் தையும்,அதிலுள்ள பரிசுத்த ஸ்தலத்தையும் திரும்ப கட்டுவ தற்கு கர்த்தராகிய தேவனை வேண்டிக்கொண்ட போது காபிரி யேல் என்னும் தேவதூதன் தீர்க்கத்தரிசிக்கு தரிசனமாகி, இரட் சண்ய ஆலோசனை உலகத்தில் பூரணமாய் நிறைவேறுங் காலத்தை தெரிவித்தான். 8,10,11,12 அதிகாரங்களில் சொல்லி யிருக்கும் தரிசனங்களில் தேவதூதன் தேவராஜ்யத்தின் சரித்தி ரத்தைப்பற்றி விளக்கி, ஒரு புதிய ராஜ்யம் தேவனுடைய ராஜ்யத்தோடு சண்டை செய்து குறித்த காலத்தில் ஒழிந்து போன பின்பு கடைசி சத்துருவாகிய நான்காம் ராஜ்யத்தின் வல்லமை உலகத்துக்கு நேரிடும் நியாயத் தீர்ப்பினால் ஒழிந்து போகும் என்று காட்டுகிறான். தானியேல் கண்ட இக்கடைசி இரண்டு தரிசனங்களுக்கும் நோக்கம் இன்னதென்று தானி12:4-13 வரையுள்ள வசனங்களில் சொல்லப்பட்டிருக்கி றது. தேவ தூதன் தானியேலிடம் அவன் கண்ட எல்லா தரிச னங்களையும் ஒரு புத்தகத்தில் எழுதி வைத்து வருங்காலங்க ளின் உபயோகத்துக்காக பத்திரப்படுத்தச்சொன்னான்.

செப்துவகிந்து என்னும் கிரேக்க மொழி பெயர்ப்பில் தானி 3:22 முதல் எபிரேய பாஷையில் இல்லாத 67 வசனங்கள் உண்டு. இவைகளில் மூன்று வாலிபர்கள் செய்த ஜெபமும், சூளையை சூடாக்கின விஷயமும் ,ஒரு ஆசிர்வாதமும் விவர மாக சொல்லப்பட்டிருக்கிறது. கத்தோலிக்க வேதாகமத்தில் இந்த நூலோடு சூசன்னாள் சரித்திரமும்,பேலும், வலுசர்ப்ப மும் என்ற இரண்டு சரித்திரங்களும் சேர்ந்திருக்கிறது. ஆதி கிறிஸ்தவர்களால் அங்கீரிக்கப்பட்ட இவர்கள் தானியேல் என் பவனைப்பற்றி பேசினாலும் தானியேலின் நூல் வேறே இவை கள் வேறே என்று நாம் தீர்மானிக்க வேண்டும்.

தானியேல் புத்தகத்தின் பொதுவான நோக்கம் சுருக்க மாக சொல்ல வேண்டுமானால் நியாயத்தீர்ப்பு பூரணமாக நிறைவேறும் வரை நடக்கும் போராட்டங்களையும்,உபத்திர வங்களையும் விசுவாசிகள் அறிந்து,கடைசியாக கிடைக்கும் ஜெயத்தின் மேல் நம்பிக்கை வைத்து, நிலை பெற்று, சுத்திக ரிப்பு அடைவது என்பதாகும்.

தானியேலின் மரணத்தைப்பற்றி ஒன்றும் தெரியாதிருக்க அவன் எருசலேமுக்கு திரும்ப வந்து இறந்தான் என்பதே யூத பாரம்பரை. B.C. 606-ல் தானியேல் சிறைவாசத்தில் இருக்கும் போது இந்த புத்தகத்தை எழுதினான். இந்த புத்தகத்திற்கு 12 அதிகாரங்களும் 857 வார்த்தைகளும் உண்டு. 17-வது வயதில் தானியேலை சிறைபிடித்துக் கொண்டு போனார்கள். 68 வரு டம் பாபிலோனில் இருந்தான். தானியேல் இரண்டாம் அதி காரத்தில் நேபுகாத்நேச்சார் கண்ட சொப்பனம் நான்கு உலக ராஜ்யங்களைக் காண்பிக்கிறது.(தானி 2:1)

அதிகாரம் 1;1-6

முதலாம் சரித்திர பாகம்(தானி1:1-6) ஜாதிகளின் ஆளுகை யின் ஆரம்பம்:- எருசலேம் பிடிக்கப்படுதல்

யூத ராஜாவாகிய யோயாக்கீமின் ஆளுகையின் மூன்றாம் ஆண்டில் பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் பாபி லோனில் வந்து அதை முற்றுகை போட்டான். கர்த்தர் யூதா ராஜாவான யோயாக்கீனையும்,தேவனின் ஆலயத்திலுள்ள பாத்திரங்களில் சிலவற்றையும் அவனுடைய கையில் ஒப்புக் கொடுத்தார்.அவன் அவற்றை சிநேயார் தேசத்தில் தன் தேவ

னின் கோவிலிற்குக் கொண்டு போய், அவைகளை தன் தேவனின் பண்டக சாலையில் வைத்தான். (தானி1:1-2)

எரேமியா 25:8-11 வரை சொல்லியிருக்கிற படி நடைபெற்றது. நீங்கள் என் வார்த்தைகளைக் கேளாமற் போனபடியினால் இதோ, நான் வடக்கேயிருக்கிற சகல வம்சங்களையும், என் ஊழியக்காரனாகிய நேபுகாத்நேச்சார் என்கிற பாபிலோன் ராஜாவையும், அழைத்தனுப்பி, அவர்களை இந்த தேசத்துக்கு விரோதமாகவும், இதன் குடிகளுக்கு விரோதமாகவும் சுற்றிலுமிருக்கிற இந்த எல்லா ஜாதிகளுக்கும் விரோதமாகவும் வரப்பண்ணி, அவைகளைச் சங்காரத்துக்கு ஒப்புக்கொடுத்து, அவைகளைப் பாழாகவும், இகழ்ச்சிக்குறியாகிய ஈசல் போடுதலாகவும், நித்திய வனாந்திரங்களாகவும் செய்வேன் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார். மகிழ்ச்சியின் சத்தத்தையும், சந்தோஷத்தின் சத்தத்தையும், மணவாளனின் சத்தத்தையும், மணவாட்டியின் சத்தத்தையும், எந்திரத்தின் சத்தத்தையும், விளக்கின் வெளிச்சத்தையும் அவர்களிலிருந்து நீங்கப் பண்ணுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார். இந்த தேசமெல்லாம் வனாந்தரமும் பாழுமாகும்; இந்த ஜாதிகளோ, எழுபது வருஷமாகப் பாபிலோன் ராஜாவைச் சேவிப்பார்கள்.

இது யோயாக்கீமின் நான்காம் வருடம் என்றும், தானியேவின் மூன்றாம் வருடம் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த தவறுதல் வரக் காரணம் நேபுகாத் நேச்சார் தமது படையெடுப்பு யோயாக்கீமின் மூன்றாம் வருஷத்தின் கடைசியில் ஆரம்பமானது என்றார். ஆனால் தானியேல் அது மூன்றாம் வருடம் என்று சொல்லியிருக்கிறான். ஆனால் எருசலேமை கீழடக்குதல் அடுத்த வருடம் ஒன்பதாம் மாதத்தில் நடைபெற்றது. ஆகையால் எரேமியா நான்காம் வருடம் என்று கணக்காக்கியிருக்கிறான். பாஷை தாறுமாறானதால் நோவாவின் பின் சந்ததியார் பாபேலிலிருந்து சிதறடிக்கப்பட்டதோடுகூட, உலக ஜாதிகளை தேவன் காணக்கூடாத நிலையில் அடக்கி வைத்திருந்ததால் யாதொரு ராஜாவும் உலகத்தில் மற்றெல்லா ராஜ்ஜியங்களையும் கீழ்ப்படுத்த தேவன் சம்மதிக்கவில்லை.

ஆபிரகாமின் சந்ததியார் எபிரேயர் என்ற தனிப்பட்ட ஜாதியாக எண்ணப்பட தேவனுடைய மனதில் இருந்தபடி

யால் இப்படி நடந்தது. ஆனால் அவர்களுடைய கீழ்ப்படியாமையும், விக்கிரக ஆராதனையும் இதற்குதடையாக இருந்தது. B.C. 721-ல் பத்துக்கோத்திரங்கள் அசூருக்கு ஸார்ஜன் ராஜாவினால் அடிமைகளாக கொண்டு போகப்பட்டார்கள். ஆனால் B.C. 606-ல் அதாவது 115 வருடங்களுக்குப் பிறகு யூதா என்ற மீதி கோத்திரங்களைக் குறித்து எரேமியா தீர்க்கத்தரிசனம் சொன்னது போல (25:11) 70 வருடத்தில் அவர்களுக்கு பாபிலோனின் அடிமைத்தனம் ஆரம்பித்தது.

இது வரையும் தேவன் சம்மதிக்காவிட்டாலும், சில ராஜ்யங்களுக்கு மற்ற ராஜயங்களை கீழ்ப்படுத்த உள்ள தைரியம் உண்டானது. இந்த ராஜ்யங்களில் பாபிலோன் அசூரை கீழடக்கியது. B.C. 605ல் எகிப்தின் ராஜாவான பரோனிக்கோ, பாபிலோனில் சென்று கர்கேமிஷில் யுத்தம் நடத்தினான். அதில் எரேமியா தீர்க்கத்தரிசனம் சொன்ன படி நேபுகாத்நேச்சார் ஐபிராத்து நதியின் மேற்கு தீரத்தில் வைத்து இரக்கம் இல்லாமல் பரோனிக்கோவை முறியடித்தான்.(எரே 46:1-26)இப்படி நேபுகாத் நேச்சார் எகிப்து ராஜாவை தோற்கடித்து பாபிலோனை உலகத்திலே மிகவும் பெரிய ராஜ்யமாக்கினான்.

நேபுகாத்நேச்சார் பரோனிக்கோவை பின்பற்றி எகிப்தில் சென்றான். அவனை தோற்கடித்த பிறகு யோயாக்கீமின் மூன்றாம் ஆண்டில் B.C. 605-ல் எருசலேமில் சேர்ந்து அதை முற்றுகை போட்டான். எல்லா தாக்குதல்களையும் கஷ்டம் இல்லாமல் எதிரிட்டு, நகரத்தைப் பிடித்தான். யோயாக்கீமை விலங்கு போட்டு பாபிலோனுக்கு கொண்டு போக ஆயத்தப்பட்டான். இந்த சமயம் தன் தகப்பனின் மரணச்செய்தி கேட்டு, நேபுகாத்நேச்சார் யோயாக்கீமை விட்டு விடவும், அவனை சிங்காசனத்தில் திரும்பவும் உட்கார வைக்கவும் செய்தான். ஆனால் அவன் வெறும் கையாய் திரும்பிப் போகாமல், எருசலேம் தேவாலயத்தை கொள்ளையிட்டான். அங்கிருந்த பொன் பாத்திரங்களை எடுத்தான். ராஜா, படை வீரர்களில் முக்கியமானவர்களை அழைத்து இஸ்ரவேல் மக்களில் ராஜ சந்ததியாரிலும், துரை மக்களிலும் அவயவம் நஷ்டப்படாதவர்களும், அழகுள்ளவர்களும், சகல ஞானத்தில் நிபுணர்களும், அறிவில் சாமர்த்தியம் உள்ளவர்களையும் தெரிந்தெடுத்து, பாபிலோனுக்கு அனுப்ப ஏற்பாடு செய்தான். பின்

அவர்களுக்கு கல்தேயரின் பாஷையையும், எழுத்தையும் கற்பிக்க வேண்டிய ஒழுங்குகளைச் செய்தான்.

மூன்று வருடங்களுக்குப்பிறகு யோயாக்கீம் நேபுகாத்நேச்சாருக்கு எதிராக எழும்பினான். தேவன் அடுத்த ராஜ்யங்களான கல்தேயர், சீரியர் மோவாபியர், அம்மோனியர் இவர்களை யூதாவை அழிக்கும்படி அனுப்பினார். (ii ராஜா 24:1-4) இது ஐந்து வருட காலம் தொடர்ந்து நின்றது. யோயாக்கீம் வெட்கமடையும் நிலையில் மரித்தான். (எரேமி 22:17-19) அவனுக்குப் பதிலாக அவன் குமாரன் யோயாக்கீன் ராஜாவாகி மூன்று மாதம் மட்டும் ஆண்டான். அவன் கர்த்தருடைய பார்வைக்குப் பொல்லாப்பானதை செய்தான். ஆனால் B.C.598-ல் நேபுகாத்நேச்சார் இரண்டாம் தடவை எருசலேமின் மீது படையெடுத்து யோயாக்கீனையும், பிரபுக்களையும், பராக்கிரமசாலிகள் யாவரையும், பத்தாயிரம் பலசாலிகளையும், ஆயிரம் ஆசாரியர்களையும், இப்படி யுத்தம் செய்யக்கூடிய சகலபேரையும், சிறை பிடித்து பாபிலோனுக்கு கொண்டு போனான். இவர்களும் போய் அங்கு அடிமைகள் ஆனார்கள். ஏழை ஜனங்கள் மட்டும் மீதியாயிருந்தார்கள். இதை சாதாரணமாக சிறைவாசம் என்று அவர்கள் எண்ணத்தின்படி சொல்லுகிறார்கள். ஆனால் 70 வருடத்தின் அடிமைத்தனம் B.C. 606-ல் ஆரம்பித்தது. அது பாபிலோனின் தோல்வியோடும், கோரேஸின் மரணத்தோடும் முடிவடைந்தது. B.C. 536-ல் யூதர்கள் எருசலேமுக்குத் திரும்பிப்போக உள்ள கட்டளையை கோரேஸ் வெளியிட்டான்.

தனது சிறைவாசிகளைத் திரும்ப அனுப்பு முன் யோயாக்கீமின் சிறிய தகப்பனாகிய மத்தனியாவை ராஜாவாக்கினார்கள். அவன் பெயர் சிதேக்கியா. அவன் கர்த்தருக்கு பொல்லாப்பானதைச் செய்தான். பாபிலோன் ராஜாவை எதிர்த்தான். அவன் ஆளுகையின் ஒன்பதாம் ஆண்டில் நேபுகாத்நேச்சார் எருசலேமை மூன்றாம் முறையாக திரும்பவும் முற்றுகை போட்டான். இரண்டு வருடத்திற்குப் பிறகு B.C. 587-ல் அதை பிடித்தான். எருசலேம் தேவாலயமும், நகரமும் அழிக்கப்பட்டது. அன்று முதல் யூத ராஜ்யம் இல்லாமல் போய் விட்டது. (i ராஜா24:17:20;25:1-21) இதைத்தான் அழிவு என்று சொல்லப்படுகிறது. காரணம் எரேமியா மூலம் தீர்க்கத்தரிசனம் சொல்

லப்பட்ட 70 வருஷத்தினுடைய அழிவைப்பற்றித் தான் அப்படி சொல்லப்பட்டிருக்கிறது.(எரே 25:11) B.C. 606-ல் நேபுகாத்நேச்சார் ராஜாவான போது ஜாதிகளுடைய காலம் ஆரம்பித்தது. அதாவது அவனது சாம்ராஜ்யம் தான் உலகம் கண்டிருக்கிற முதலாவது சாம்ராஜ்யம்.

எபிரேய அடிமைகள்

அப்பொழுது ராஜா தன் பிரதானிகளின் தலைவனாகிய அஸ்பேனாஸிடம் இஸ்ரவேல் மக்களில் ராஜ சந்ததியிலும், துரை மக்களிலும் அங்கவீனமில்லாதவர்களும், அழகுள்ளவர்களும், சகல ஞானத்திலும் தேறினவர்களும், அறிவில் சிறந்தவர்களும், கல்வியில் நிபுணரும், ராஜாவின் அரண்மனையில் சேவிக்கத் திறமையுள்ளவர்களுமான சில வாலிபர்களைக் கொண்டு வரவும், அவர்களுக்கு கல்தேயரின் எழுத்தையும் பாஷையையும் கற்றுக் கொடுக்கவும் கட்டளையிட்டான். அவர்களில் தானியேல், அனனியா, மீஷாவேல், அசரியா என்ற யூத வாலிபர்களும் இருந்தார்கள். தானியேலுக்கு அவன் பெல்தெஷாத்சார் என்றும், அனனியாவுக்கு சாத்ராக் என்றும், மீஷாவேலுக்கு மேஷாக் என்றும், அசரியாவுக்கு ஆபேத்நேகோ என்றும் பெயரிட்டான். (தானி 1:3-4;6-7)

ஏசாயா தீர்க்கத்தரிசி எசேக்கியா ராஜாவை நோக்கி சேனைகளுடைய கர்த்தரின் வார்த்தையைக் கேளும். இதோ நாட்கள் வரும்; உன் வீட்டில் உள்ளதிலும், உன் பிதாக்கள் இந்நாள் வரைக்கும் சேர்த்ததிலும் ஒன்றும் மீதியாய் வைக்கப்படாமல் எல்லாம் பாபிலோனுக்குக் கொண்டு போகப்படும். நீ பெறப் போகிற உன் சந்ததியாகிய உன் குமாரரிலும் சிலர் பாபிலோன் ராஜாவின் அரண்மனையிலே வேலைக்காரராயிருப்பார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றான். (ஏசா 39:5-7)

கர்த்தருடைய வேத புஸ்தகத்திலிருந்து நான்கு எபிரேய அடிமைகளான தானியேல், அனனியா, மீஷாவேல், அசரியா என்ற இவர்கள் ராஜசந்ததியில் உட்பட்டவர்கள். ஆகையால் எசேக்கியாவின் வம்சத்தில் உள்ளவர்கள் என்றும் சிந்திக்கலாம். அவர்களை அடிமைகளாக்கி, அடிமைகளின் தலைவனின் கையில் ஒப்புவித்ததினால் இந்த எண்ணத்தை ஏற்றுக்

கொள்ளலாம். அவன் அவர்களின் பெயரை மாற்றி அவர்கள் மேல் மூன்று வருடம் தலைமை வகித்தான். தானியேல் (தேவன் என் நியாயாதிபதி) பெல்தெஷாத்சார் (பேல் சகாயிக் கிறவன்) என்றும் அனனியாவுக்கு (கர்த்தருக்குப் பிரியமான வன்) என்றும் சாத்ராக்குக்கு (சூரிய தேவனால் பிரகாசிக்கப் பட்டவன்) என்றும் மீஷா வேலுக்கு (தேவனைப் போல யாருண்டு) என்றும் மேஷாக்குக்கு (ராஜாவின் விருந்தாளி) என்றும் அசரியாவிற்கு (எகோவா என் சகாயர்) என்றும் ஆபேத்நேகோவிற்கு (நேகோவின் தாசன்) என்றும் பெயரிட் டான். இப்படி பெயர் மாற்றி போட்டதின் காரணம் அவர்கள் தேவனிலிருந்தும், அவர்கள் தேசத்திலிருந்தும், மதத்திலிருந் தும் திருப்பிக் கொண்டு வருவதற்கு எடுத்த உபாயமாக இருந் தது மட்டுமல்ல அவர்களுடைய எதிர்காலத்தில் புற ஜாதிக ளின் விசுவாச ஆசாரங்களுக்கு அவர்களை மாற்றுவதற்கு நினைத்தும் தான் இப்படி செய்தான்.

ஒருவனுடைய பழக்கத்தினால் அவனுடைய சுபாவத் திற்கு மாற்றம் வராது. இந்த வாலிபர்கள் தங்கள் மதத்திலும், விசுவாசத்திலும் சரியாக வேரூன்றியவர்கள். ஆதலால் புற ஜாதிகளின் ஆசார விசேஷங்களுக்கு அவர்களில் இடமில்லை.

எகிப்தில் யோசேப்பும், பாபிலோனில் தானியேலும் காரியங்களில் கூடுதல் நெருங்கின சம்மந்தம் உள்ளவர்கள். இரண்டு பேரும் எபிரேயராக இருந்தார்கள். இரண்டு பேரும் புறஜாதி ராஜ்யத்தில் அடிமைகளாக இருந்தார்கள். இரண்டு பேரும் சொப்பனக்காரரும், வியாக்கியானிகளுமாக இருந்தார் கள். இரண்டு பேருடையவும் சுபாவ நிலைமை பரிசோதிக்கப பட்டது. யோசேப்பு போத்திபாரின் வீட்டிலும் (ஆதி *39:1-23*) தானியேல் பாபிலோன் ராஜாவின் அரண்மனையில் வைத்தும் அவர்களுடைய நிலமை கடின பரீட்சைக்கு உட்பட வேண்டி வந்தது. அவர்கள் தங்கின வீடுகளில் இரண்டு பேரும் ஆசிர்வ திக்கப்பட்டவர்களாயிருந்தார்கள்.இரண்டு பேரும் இரண்டு பெரிய மகிமையான ஸ்தானத்துக்கு உயர்த்தப்பட்டார்கள். அதன் ரகசியம் தேவனோடுள்ள அவர்களுடைய பயபக்தியும் மரியாதையும்தான்.

தானியேலுக்கும் அவனுடைய சிநேகிதர்களுக்கும் அவர் களுடைய மதத்தின் காரியத்தில் தான் சோதனை ஏற்பட்டது.

அவர்களுக்கு ராஜபோஜனமும் கொடுக்க கட்டளையிடப்பட்டது.

ராஜா, தான் உண்ணும் போஜனத்திலேயும், தான் குடிக்கும் திராட்ச ரசத்திலேயும் தினம் ஒரு பங்கை அவர்களுக்கு நியமித்து, அவர்களை மூன்று வருஷம் வளர்க்கவும், அதன் முடிவிலே அவர்கள் ராஜாவுக்கு முன்பாக நிற்கும்படி செய்யவும் கட்டளையிட்டான்.(தானி1:5)

பாபிலோனைப் போல் உள்ள சுகமான வாழ்க்கையில் சமயம் போக்கி முன்னேற மாம்ச சம்மந்தமான ஒரு வாலிபனை அழைத்தால் அவன் அதில் சந்தோஷமுள்ளவனாகவும், தன்னை அப்படி அழைத்ததில் நன்றி கூறுகிறவனாகவும் இருப்பான். பலவிதத்திலுள்ள சாக்குப் போக்குகள் அவர்களுக்கு சொல்லவும் முடியும். தாங்கள் அடிமைகள் ஆனதால் ராஜகட்டளைக்கு கீழ்ப்படிய வேண்டியது மிகவும் அவசியம். ஒரு நாட்டிற்குப் போனால் அந்த நாட்டின் ஆசாரங்கள், மரியாதைகள் போன்றவைகள் எல்லாவற்றிலும் பங்கெடுக்க வேண்டியதாகும். ராஜ கட்டளைக்கு விரோதம் செய்தால் ராஜாவின் உரிமைகள் நஷ்டப்படும். மட்டுமல்ல ஜீவனுக்கு கூட ஆபத்து வரும். இந்த ஆபத்து அவர்கள் மூன்று பேரும் எரிகிற அக்கினிச்சூளையில் விழுந்த போது நிறை வேறவும் செய்தது. போஜன காரியத்தில் உள்ள அவர்களுடைய தீர்மானம் அவர்களை தனிப்படுத்தவும், சிந்தனைக்கு விஷயமாக்கவும் செய்தது. ஆனால் இக்காரியத்தில் அவர்கள் பயப்படவும் இல்லை. ஒரு ஒப்பந்தமும் அவசியம் இல்லை என்றும் அவர்கள் தீர்மானித்தார்கள். அவர்களுக்கு உண்டான ஒரு பயம் ஒரு வேளை ராஜாவின் மேசையிலிருந்து கிடைக்கிற எல்லா வைபவங்களும் நியாயப் பிரமாணப் பிரகாரம் விலக்கப்பட்டிருக்கிற பன்றி இறச்சியோ(லேவி11:1-47) அல்லது இரத்தம் மாறிப் போகாத மற்ற இனம் மாம்சமோ (லேவி7:10-14) ஒரு வேளை விக்கிரங்களுக்கு படைத்த எதாவது ஆகாரங்களோ இருக்கலாம் என்பதுதான், ஆகையால் போஜனத்தைப்பற்றியுள்ள பிரதிஷ்டையை நிறைவேற்றுகிற காரியத்தில் தானியேல் மற்ற சிநேகிதர்களின் உதவியை விரும்பினான். ஆனால் தானியேல் ராஜாவின் போஜனத்தினாலும் அவர் பானம் பண்ணும் திராட்சைரசத்தினாலும் தன்னைத் தீட்டுப்படுத்தலாகாதென்று,

தன் இருதயத்தில் தீர்மானம் பண்ணிக் கொண்டு, தன்னைத் தீட்டுப்படுத்தாதபடி பிரதானிகளின் தலைவனிடத்தில் வேண்டிக் கொண்டான். (தானி 1:8)

தேவன் தானியேலுக்கு பிரதானிகளின் தலைவனிடத்தில் தயவும் இரக்கமும் கிடைக்கும்படி செய்தார். பிரதானிகளின் தலைவன் தானியேலை நோக்கி உங்களுக்குப் போஜனத்தையும் பானத்தையும் குறித்திருக்கிற ராஜாவாகிய என் ஆண்டவனுக்கு நான் பயப்படுகிறேன். அவர் உங்களோடொத்த வாலிபரின் முகங்களைப் பார்க்கிலும் உங்கள் முகங்கள் வாடிப் போனவைகளாகக் காண வேண்டியதென்ன? அதினால் ராஜா என்னைச் சிரச்சேதம் பண்ணுவாரே என்றான். (தானி1:9-10)

இதற்கு மிகவும் தைரியமாக தானியேல் மறுபடி சொன்னான். கல்தேயருடைய மதசம்மந்தமான காரியத்திலோ, விக்கிரக ஆராதனையின் காரியத்திலோ யாதொரு எதிர்ப்பும் சொல்லாமல் மிகவும் சாந்தமாயும், மரியாதையாயும் அவன் வேண்டிக் கொண்டான்.

அப்பொழுது பிரதானிகளின் தலைவனாலே தானியேல், அனனியா, மீஷாவேல், அசரியா என்பர்கள் மேல் விசாரிப்புக் காரனாக வைக்கப்பட்ட மேல்ஷார் என்பவனை தானியேல் நோக்கி பத்துநாள் வரைக்கும் உமது அடியார்களை சோதித்துப்பாரும். எங்களுக்கு புசிக்க பருப்பு முதலான மரக் கறிகளையும், குடிக்கத் தண்ணீரையும் கொடுத்து எங்கள் முகங்களையும், ராஜ போஜனத்தில் புசிக்கிற வாலிபருடைய முகங்களையும் ஒத்துப்பாரும். பின்பு நீர் காண்கிறபடி உமது அடியாருக்குச் செய்யும் என்றான். (தானி1:11-13)

இது மிகவும் நல்ல ஒரு பரீட்சையாக இருந்தது. பிரதானிகளின் தலைவனை தண்டனைக்கு ஆளாக்கவோ, அவனுக்கு கஷ்டங்கள் உண்டு பண்ணவோ தானியேல் ஆசிக்கவில்லை. ஆகையால் தானியேல் பிரதானிகளின் தலைவனாகிய மேல்ஷாருக்கு திருப்திகரமான விதத்தில் காரியம் தீர்மானித்தான். காய்கறிகளும், தண்ணீரும் அவர்களை திருப்திகரமான பெலத்தில் காக்கப் போதுமோ என்று நிச்சயிக்கப் பத்து நாள் தேவையாக இருந்தது.

அவன் இந்தக் காரியத்திலே அவர்களுக்கு செவிகொடுத்து பத்து நாளளவும் அவர்களை சோதித்துப் பார்த்து பத்து நாள் சென்ற பின்பு ராஜபோஜனத்தை புசித்த எல்லா வாலிபரைப் பார்க்கிலும் அவர்கள் முகம் களையுள்ளதாயும் சரீரம் புஷ்டியாயும் காணப்பட்டது. ஆகையால் மேல்ஷார் அவர்கள் புசிக்க கட்டளையான போஜனத்தையும், அவர்கள் குடிக்க கட்டளையான திராட்சரசத்தையும் நீக்கி வைத்து, அவர்களுக்கு பருப்பு முதலானவைகளைக் கொடுத்தான் *தானி(1:14-16)*

இந்த நான்கு வாலிபர்களுக்கும் தேவன் சகல எழுத்திலும், ஞானத்திலும், அறிவையும் சாமர்த்தியத்தையும் கொடுத்தார். தானியேலை சகல தரிசனங்களையும், சொப்பனங்களையும் அறியத்தக்க அறிவுள்ளவன் ஆக்கினார்.*(தானி1:17)*

யோசேப்பையும், மோசேயையும் போல தானியேலிற்கும் அவனுடைய சிநேகிதர்களுக்கும் ராஜாவின் அரண்மனையில் பதவி கிடைத்தது. கல்தேயருடைய படிப்பும், பாஷையும் படிப்பிக்க இவர்கள் மற்றவர்களின் மத்தியிலிருந்து தெரிந்தெடுக்கப்பட்டார்கள். இவர்கள் ராஜ சன்னிதியில் நிற்கத் தக்க ஞானம் உள்ளவர்களாய் ஆக வேண்டுமென்பது தான் ராஜாவின் எண்ணம். இக் காரியத்தில் யாதொரு தவறுதலும் வரவில்லை. ஞானம் சம்பாதிக்கிறதற்கு தடை சொல்லக்கூடிய யாதொன்றும் கிறிஸ்தவ மார்க்க விசுவாசத்தில் இல்லை. விஞ்ஞானம் (சயின்ஸ்) படிப்பதில் யாதொரு தவறும் இல்லை. ஆனால் மற்றவர்களை சம்மந்தித்த மட்டில் தேவனிலும், தேவ வசனத்திலும் உள்ள விசுவாசத்திலிருந்து பங்கம் ஏற்பட அது வழிகாட்டுவதாக இருந்தாலும் தானியேலின் காரியத்தில் இவ்வாறுள்ள எந்த தவறும் ஏற்படவில்லை. தானியேலின் சிநேகிதர்களும் மூன்று வருடம் படித்தார்கள் என்று சொல்லுவதிலிருந்து அரண்மனைக்குச் சொந்தமான பாடசாலையோ, சர்வகலாசாலையோ இருந்தது என்று அறியலாம். அங்கே உத்தமர்களான வாலிபர்களை பழக்கி வந்தார்கள். அவர்களுக்கு ராஜாவின் போஜனம் கொடுத்து வந்தார்கள். ஆகையால் இந்த பள்ளிக்கூடம் அரண்மனையின் பக்கத்தில் இருந்தது என்று ஊகிக்கலாம். அங்குள்ள முக்கியமான பாடம் அறிவுப் படிப்பும், கல்தேயருடைய பாஷையைப்

பற்றி படிப்பதுமாக இருந்தது. அவர்கள் இலக்கணம், கணக்கு, விஞ்ஞானம் என்ற இந்த விஷயங்களில் மிகவும் முன்னேறியிருந்தார்கள். பாபேலின் பூமியில் தான் பாபிலோன் கட்டப்பட்டிருந்தது என்பது நாம் மறக்கக் கூடாது. பாபேல் வாசிகளான இவர்களுக்கு ஜலப்பிரளயத்திற்கு முன்பு உண்டாயிருந்தவர்களுடைய சாமர்த்தியமும், ஞானமும் இருந்தது.

ஜலப்பிரளயத்திற்கு முன்னே இருந்தவர்கள் சங்கீத உபகரணங்களிலும் இரும்பினால் உள்ள வேலைகளிலும் நிபுணர்களாயிருந்தார்கள். (ஆதி4:20-22) இந்த வாலிபர்களை கொண்டு வருவதற்கு குறித்த நாட்கள் நிறைவேறின போது பிரதானிகளின் தலைவன் அவர்களை நேபுகாத்நேச்சாரின் முன்பாக கொண்டு வந்து விட்டான். ராஜா அவர்களோடு பேசினான். அவர்கள் எல்லாருக்குள்ளும் தானியேல், அனனியா, மீஷாவேல், அசரியா என்பவர்களைப் போல வேறு ஒருவரும் காணப்படவில்லை. ஆகையால் அவர்கள் இராஜ சமூகத்தில் நின்றார்கள். ஞானத்துக்கும்,புத்திக்கும் அடுத்த எந்த விஷயத்தில் ராஜா அவர்களை கேட்டு விசாரித்தானோ அதிலே தன் ராஜ்யம் எங்கும் உள்ள சகல சாஸ்திரிகளிலும், ஜோசியர்களிலும் அவர்களை பத்து மடங்கு சமர்த்தராகக் கண்டான். (தானி 1:18-20)

இவைகளில் நாம் முக்கியமான ஒரு காரியம் அறிந்திருக்க வேண்டும். தானியேலுக்கோ, அவனது சிநேகிதர்களுக்கோ தங்களது சொந்த நாட்டில் திரும்பி போவோம் என்று எந்த நம்பிக்கையும் இல்லாதிருந்தது. அடுத்த 70 வருடத்துக்கு அப்படிப்பட்ட நம்பிக்கைக்கு எந்த வழியும் இல்லாதிருந்ததினால் அந்த தேசத்திலுள்ள ஆராதனை முறைமைகளை அவர்கள் அங்கீகரித்திருக்க வேண்டும். ஆனால் அவர்கள் அப்படி செய்யவில்லை. காரணம் மேன்மையுடையவும், ஐசுவரியத்தினுடையவும் முடிவில் அதற்கு எதிரான காரியங்கள் நடக்கும் என்று அவர்கள் முன் கூட்டி அறிந்திருந்தார்கள். இதெல்லாம் இருந்தும் தானியேலை பாபிலோன் மாகாணம் முழுவதுக்கும் அதிபதியாகவும், பாபிலோனில் உள்ள சகல ஞானிகளின் மேலும் பிரதான அதிகாரியாகவும் நியமித்தான்.(தானி 2:48) பெல்ஷாத்சாரின் உபதேசகனும் தரியு ராஜாவின் பிரதான மந்

திரியுமாக அவன் உயர்த்தப்பட்டான். நமக்கும் தானியேலைப் போல எல்லாவற்றிலும் வேறுபட்டு ஜீவிக்க முடியும்.

வேறுபட்ட ஜீவியம்

விசுவாசிளாகிய நாமும் இந்த உலகமாகிய பாபிலோனில் உள்ள சுக ஜீவியத்திலும், சந்தோஷங்களிலும், சூழ்நிலைகளிலும் அடிமைகளாகி, இந்த உலகத்திற்கொத்த வேஷம் தரித்திருக்கிறோம். பிசாசுக்கு நாம் அடிமைப்பட்டிருக்கிறோம். இந்த உலகத்தோடு நாம் ஐக்கியப்பட்டு அல்லது பிணைக்கப்பட்டு போகிறதினால் பெலவீனமும், ஆவிக்குரிய வறட்சியும் நமக்கு ஏற்படுகிறது. கர்த்தருடைய வசனத்தின் மூலம் தேவன் வெளிப்படுத்தித்தர ஆசிக்கிற சொப்பனங்களும் தரிசனங்களும் கிடைக்காமல் போகிறது. இந்த உலக மாயையாகிய பாபிலோனில் நாமும் தானியேலை போல ஜீவிக்க ஆசிப்போம். தைரியப்படுவோமாக!

அதிகாரம் - 2

நேபுகாத்நேச்சாரின் சொப்பனமும் கலக்கமும்

நேபுகாத்நேச்சார் ராஜ்ய பாரம் பண்ணும் இரண்டாம் வருடத்தில் நேபுகாத்நேச்சார் சொப்பனங்களை கண்டான். அதனால் அவனுடைய ஆவிகலங்கி அவனுடைய நித்திரை கலைந்தது. (தானி 2:1) நவோபொலேசர் என்ற அவனுடைய தந்தை B.C 605-ல் மரணம் அடைந்தான். அது வரையிலும் நேபுகாத் நேச்சார் ராஜாவாக இருக்கவில்லை ஆகையால் அவனுடைய ராஜ்ய பாரத்தின் இரண்டாம் வருடம் B.C. 603 ஆக இருக்கலாம். தானியேலும் அவனுடைய சிநேகிதர்களும் B.C. 606-ல் பாபிலோனில் சிறை பிடிக்கப்பட்டு கொண்டு போகப்பட்டார்கள். மூன்று வருடம் தொடர்ந்து அவர்களுக்கு பயிற்சி கொடுக்கப்பட்டது. அவர்கள் அரண்மனைக்கு சொந்தமான பள்ளிக்கூடத்தில் பயிற்சி அளிக்கப்பட்டு ஜெயம் பெற்றார்கள். அதுவரையும் நேபுகாத்நேச்சாரின் சொப்பனம் சம்பவிக்கவில்லை. கொலை செய்யப்பட கணக்கு எடுக்கப்பட்டவர்களின் கூட்டத்தில் இவர்களும் உட்பட காரணம் இது தான். (தானி 2:13) ஞானிகளைக் கொலை செய்ய வேண்டுமென்கிற கட்டளை வெளிப்பட்ட போது தானியேலையும், அவன் தோழரையும் கொலை செய்

யத் தேடினார்கள். ஆனால் கொஞ்சம் நேரம் அவர்களுக்கு ராஜா வின் தேவை என்ன என்று அறிய முடியவில்லை. பாபிலோ னின் ஞானிகளைக் கொலை செய்யப் புறப்பட்ட ராஜாவினு டைய தலையாரிகளுக்கு அதிபதியாகிய ஆரியோகோடே தானி யேல் யோசனையும், புத்தியுமாய் பேசி, இந்தக் கட்டளை ராஜா வினால் இத்தனை அவசரமாய் பிறந்ததற்குக் காரணம் என்ன என்றுகேட்டான். அப்பொழுது ஆரியோகு தானியேலுக்குக் காரியத்தை அறிவித்தான். *(தானி 2:14-15)*

சொப்பனமும் அதின் அர்த்தமும் வெளிப்படுத்துவதற்கு முன்னே இந்த சொப்பனத்தில் அடங்கியிருக்கிற காரியம் இன் னதென்று காண்பிக்க தேவன் நேபுகாத்நேச்சாரை தெரிந்தெ டுத்த நோக்கம் என்ன என்று அறிவது நல்லது. இந்த வெளிப்ப டுத்தல் தானியேலுக்கோ, வேறு எதாவது தீர்க்கத்தரிசிக ளுக்கோ கொடுக்கலாம் அல்லவா? ராஜாக்களுக்கு கிடைக்கிற தெய்வீக உரிமைகளைக் குறித்து நாம் வாசிக்கிறதுண்டு. இந்த உரிமை எதாவது ஒரு ராஜாவுக்கு கிடைத்ததுண்டானால் அது நேபுகாத்நேச்சாருக்கு மட்டும் தான். அது அவன் கர்த்தரிடம் கட்டாயமாக வாங்கிக் கொண்டதல்ல. தேவனே அவனுக்கு கொடுத்தார்.

அவர்கள் தங்கள் எஜமான்களுக்கு சொல்லும்படி கற் பிக்க வேண்டுமென்று இஸ்ரவேலின் தேவனாகிய சேனைக ளின் கர்த்தர் உரைக்கிறது என்னவென்றால், நான் பூமியையும், மனுஷனையும் பூமியின் மேலுள்ள மிருக ஜீவன்களையும், என் மகா பலத்தினாலும் ஓங்கிய என் புயத்தினாலும் உண் டாக்கினேன். எனக்கு இஷ்டமானவனுக்கு அதை கொடுக்கி றேன். இப்பொழுதும் நான் இந்த தேசங்களையெல்லாம் என் ஊழியக்காரனாகிய நேபுகாத்நேச்சார் என்கிற பாபிலோன் ராஜாவின் கையிலே கொடுத்தேன். அவனுக்கு ஊழியம் செய் யும்படி வெளியின் மிருக ஜீவன்களையும் கொடுத்தேன். அவ னுடைய தேசத்துக்குக் காலம் வருகிற வரையில் சகல ஜாதிக ளும் அவனையும், அவனுடைய புத்திர பௌத்திரரையும் சேவிப்பார்கள். அதின் பின்பு அநேகம் ஜாதிகளும் பெரிய ராஜாக்களும் அவனை அடிமை கொள்வார்கள். எந்த ஜாதியா வது எந்த ராஜ்யமாவது பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்

நேச்சார் என்பவனைச் சேவியாமலும், தன் கழுத்தைப் பாபி லோன் ராஜாவின் நுகத்துக்குக் கீழ்ப்படுத்தாமலும் போனால், அந்த ஜாதியை நான் அவன் கையாலே நிர்மூலமாக்குமளவும், பட்டயத்தாலும் பஞ்சத்தாலும் கொள்ளை நோயாலும் தண் டிப்பேன் என்று கர்த்தர் சொல்லுகிறார். (எரேமி 27:4-8) இந்த வேதபாகத்திலிருந்து தன் வேலைக்கென்று தேவன் தேர்ந்தெ டுத்த ஒருவன் தான் நேபுகாத்நேச்சார் என்று தெரிகிறது. அவன் இக்காரியத்தைக் குறித்து அறிந்திருந்தானோ என்பது தெரியவில்லை. அதைக் குறித்து ஒன்றும் சொல்லப்பட வில்லை. எப்படியும் அவன் தனது பெரிய காரியங்களில் பெருமை கொண்டிருந்தான் என்பது விளங்குகிறது. அவன் ஒரு நாள் அரண்மனையில் நடந்து கொண்டிருக்கும்போது சொன்ன வார்த்தைகள்தான் அதற்குத் தெளிவுகள் இது. நான், என்னுடைய, இது என் வல்லமையின் பராக்கிரமத்தினால், என் மகிமை பிரதாபத்துக்கென்று ராஜ்யத்துக்கு அரண்மனை யாக நான் கட்டின மகா பாபிலோன் அல்லவா! என்றான். (தானி 4:29-30)

இதனால் இந்த சொப்பனம் இவனுக்காகத்தான் காண் பிக்க வேண்டியது அவசியமாக இருந்தது மட்டுமல்ல அவனு டைய பெருமையும், மேன்மையும் தேவசந்நிதியில் கந்தை என்றும், அவனுடைய சகல மகிமையும், உயர்வும் மிகவும் சீக்கிரம் இல்லாமற் போகும் என்றும் அவனுக்கு வெளிப்ப டுத்த வேண்டியது அவசியமாயிருந்தது.

ஆகையால் அவனுடைய ஆளுகையின் ஆரம்ப காலத் தில் தானே ஒரு நாள் அவனுடைய விசித்திரமான படுக்கை யில் படுத்து தனது ராஜ்யத்தின் விஸ்தீரணம், அதன் எதிர் காலம் எப்படியிருக்கும் என்றுள்ள சிந்தையில் இருக்கவே தூங்கிவிட்டான். அந்த சிந்தை அவனை விட்டுப் போக வில்லை. திடீரென்று சொப்பனத்தில் ஆழ்ந்தான்.

ராஜா ஒரு பெரிய சிலையைக் கண்டான். அது மிகவும் பிரகாசமுள்ளதாகக் காணப்பட்டது. அதன் ரூபம் பயங்கரமாக இருந்தது. ராஜா அதை பார்த்துக் கொண்டிருக்கும் போதே கையால் பெயர்க்கப்படாத ஒரு கல் பெயர்ந்து உருண்டு வந் தது. அது அந்த சிலையின் இரும்பும் களிமண்ணுமாகிய

அதன் பாதங்களில் மோதி அவைகளை நொறுக்கிப் போட்டது. அப்பொழுது அந்த இரும்பும், களிமண்ணும் வெண்கலமும், வெள்ளியும், பொன்னும் ஏகமாய் நொறுங்குண்டு, கோடைகாலத்தில் போராடிக்கிற களத்திலிருந்து பறந்து போகிற பதரைப் போலாயிற்று. அவைகளுக்கு ஒரு இடமும் கிடையாதபடி காற்று அவைகளை அடித்துக் கொண்டு போயிற்று. சிலையை மோதின கல்லோவென்றால் ஒரு பெரிய பர்வதமாகி பூமியை எங்கும் நிரப்பிற்று. சொப்பனத்தையும் தரிசனத்தையும் வேறுபிரித்து அறிய நமக்கு சக்தி வேண்டும்.

சொப்பனம் சாதாரண தூக்கம் வரும் நேரத்திற்கும் கடின தூக்கத்திற்கும் இடையில் உண்டாகிறது. இதற்கு இரண்டிற்கும் இடையில் உள்ள சமயம் தான் (Sleeping Consciousness) ஞாபகம் இல்லாத நிலமை (உணர்வில்லாத நிலமை) இந்த சமயத்தில் சொப்பனம் கண்டால் அறியவும் மாட்டோம். நமக்குண்டாகிற சொப்பனங்களில் ஞாபகத்தில் நிற்பது நாம் தூக்கம் விட்டு எழும்பப் போகிற நேரம் உள்ள சொப்பனம்தான். ஆனால் முக்கியமான சொப்பனம் இல்லாவிடில் சில வேளை நாம் எழும்பும் போது மறந்து போகும். தரிசனம் சாதாரணமாக நாம் விழித்து எதாவது முக்கியமான காரியங்களை சிந்திக்கும் போது உண்டாகும். அதினால் நமக்கு என்ன சம்பவிக்கப் போகிறது என்பது நமக்குத் தெரியாது. நமது கண்கள் மூடியிருக்கும் சமயம் காணும் தரிசனங்கள் அபுர்வமாயுள்ளது. அதனால் தரிசனம் கண்ணின் இமைகளுக்குள்ளில் சம்பவிக்கிறது. கண்களால் காணமுடியாதவைகள். ஆனால் கண் இமைகளை மறைக்காதிருந்தால் தரிசனம் தெளிவாயிருக்கும். சரியாக சிந்திக்கவும் முடியும். கடினவியாதிகளால் சில நாட்கள் கண்மூடி படுத்துவிட்டு, கண் விழிக்கும் போதும் தரிசனம் உண்டாகும்.

அவரவருக்கு தெரிகிற சம்பவங்களோடு ஐக்கியப்பட்டுத்தான் சாதாரணமாக சொப்பனம் உண்டாகும். 70 வருடத்துக்கு முன்னே சொப்பனம் கண்ட ஒரு ஆள் மோட்டார் வாகனமோ, ஆகாய விமானமோ சொப்பனம் கண்டிருக்க மாட்டார்கள். இன்று சொப்பனம் காண்கிற ஒரு ஆள் 100 வருடத்துக்கு முன்பு கண்ட நிலையில் உள்ள வாகனங்களைக் காண

மாட்டார்கள். நேபுகாத்நேச்சாரின் காலத்தில் ரொம்ப விலையுள்ள சிலைகள் சாதாரணமாக இருந்தத. எகிப்தின் அழிவின் நிலமையில் நமக்கு அப்படிப்பட்ட காரியங்களைக் காணமுடியும். இந்த நேரம் நேபுகாத்நேச்சார் எகிப்தோடு யுத்தம் செய்து அதை கீழடக்கிவிட்டு, திரும்பி வந்த நேரம். அதனால் எகிப்து ராஜாக்கள் உயர்த்தியிருந்த சிலைகளைக் கண்டும் ஞாபகத்தில் வைத்தும் இருந்தான். ஆகையால் அவன் தூங்க ஆரம்பிக்கும் போது இப்படிப்பட்ட காட்சிகளை சிந்தித்துக் கொண்டே தூங்க ஆரம்பித்திருக்கலாம். ஆனால் இங்கேயுள்ள ஒரு பெரிய வித்தியாசம் நேபுகாத்நேச்சார் கண்ட சிலை உலோகங்களைக் கொண்டது. இந்த சிலையில் பல உலோகங்கள் உபயோகித்திருந்ததின் ரகசியம் இந்த ராஜாவில் உள்ள முக்கியமான விஷயமாகும். பழய காலத்தில் புறஜாதிகளின் ராஜாக்களோடு, எகிப்தில் பார்வோனுக்குண்டானது போல, சொப்பனங்கள் வழியாகத்தான் காரியங்களை தேவன் அறிவித்து வந்தார். நேபுகாத் நேச்சாரும் எதிர்கால காரியங்கள் தனது சொப்பனம் மூலம் அறிந்தால் நல்லது என்று ஆசித்தான். அவன் கண்ட சொப்பனம் மிகவும் பயங்கரமாக இருந்ததால் மனதில் கலங்கி பயப்பட்டு விழித்துக் கொண்டான். அவனுடைய சொப்பனம் அவன் நினைக்கிறதற்கு முன்னே மறந்து விட்டான். ராஜா தன் சொப்பனங்களை அறிய ஆவியில் கலங்கி சாஸ்திரிகளையும், ஜோசியரையும், சூனியக்காரரையும், கல்தேயரையும் அழைக்கச் சொன்னான். அவர்கள் வந்து ராஜ சன்னிதியில் நின்றார்கள். ராஜா அவர்களை நோக்கி நான் ஒரு சொப்பனம் கண்டேன். அந்தச் சொப்பனத்தை அறிய வேண்டுமென்று என் ஆவி கலங்கியிருக்கிறது என்றான். *(தானி 2:3)*

மந்திரவாதிகள் மந்திர கிரியைகள் செய்து பழக்கம் உள்ளவர்கள். குறி சொல்லுதலும், எதிர்காலங்களை சொல்லுதல் முதலான எல்லாவித அவிசுவாச காரியங்களில் அவர்கள் அதிக நிச்சயமுள்ளவர்கள். குறி சொல்பவர்கள் நட்சத்திரங்களை படித்து எதிர்காலத்தைக் குறித்துச் சொல்ல பழக்கமுள்ளவர்கள். மேற்கத்திய தேசங்களில் முந்தின காலங்களில் இந்தக் காரியம் பழக்கமாக இருந்தது. இந்த மந்திரவாதிகள் மரித்தவர்களோடு சம்மந்தம் காட்ட முடியும் என்றும் நம்பினார்கள். சில மருந்து மாத்திரைகளை உபயோகித்து மிதமான

நிலையில் காரியங்களை சிந்திக்க கூடியவர்கள் என்றும் கூறி வந்தனர். கல்தேய விஞ்ஞானத்தை தங்களுடைய முக்கிய படிப்பாக கொண்டிருந்த தத்துவ ஞானிகள், தானியேலும் அவனுடைய சிநேகிதரும் இந்தக் கூட்டத்தில் அழைக்கப்பட்டிருந்தார்கள்.

அப்பொழுது கல்தேயர் ராஜாவை நோக்கி; ராஜாவே, நீர் என்றும் வாழ்க: சொப்பனத்தை உமது அடியாருக்குச் சொல்லும். அப்பொழுது அதின் அர்த்தத்தை விடுவிப்போம் என்று சீரிய பாஷையிலே சொன்னார்கள். ராஜா கல்தேயருக்கு பிரதியுத்தரமாக, என்னிடத்ததிலிருந்து பிறக்கிற தீர்மானம் என்னவென்றால், நீங்கள் சொப்பனத்தையும் அதின் அர்த்தத்தையும் எனக்கு அறிவியாமற் போனால் துண்டித்துப் போடப்படுவீர்கள். உங்கள் வீடுகள் எருக்களங்களாக்கப்படும். சொப்பனத்தையும் அதின் அர்த்தத்தையும் தெரிவித்தீர்களேயாகில், என்னிடத்தில் வெகுமதிகளையும் பரிசுகளையும் மிகுந்த கனத்தையும் பெறுவீர்கள். ஆகையால் சொப்பனத்தையும் அதின் அர்த்தத்தையும் எனக்கு தெரிவியுங்கள் என்றான். அவர்கள் மறுபடியும் பிரதியுத்தரமாக; ராஜா அடியாருக்குச் சொப்பனத்தைச் சொல்வாராக! அப்பொழுது அதின் அர்த்தத்தை விடுவிப்போம் என்றார்கள். அதற்கு ராஜா பிரதியுத்தரமாக என்னிடத்திலிருந்து தீர்மானம் பிறந்தபடியினாலே நீங்கள் காலதாமதம் பண்ணப் பார்க்கிறீர்களென்று நிச்சயமாக எனக்கு தெரியவருகிறது. காலம் மாறுமென்று நீங்கள் எனக்கு முன்பாக பொய்யும் புரட்டுமான விசேஷத்தை சொல்லும்படி எத்தனம் பண்ணியிருக்கிறீர்கள். நீங்கள் சொப்பனத்தை எனக்குத் தெரிவிக்காமற் போனால், உங்களெல்லாருக்கும் இந்த ஒரே தீர்ப்பு பிறந்திருக்கிறது. ஆகையால் சொப்பனத்தை எனக்குச் சொல்லுங்கள். அப்பொழுது அதின் அர்த்தத்தையும் உங்களால் காண்பிக்க கூடுமென்று அறிந்து கொள்ளுவேன் என்றான். *(தானி 2:4-9)*

பழைய காலத்தில் பழமொழிகள், சொப்பன வியாக்கியானங்கள், தங்களுக்கு தேவையான கருத்துகள் முதலானவைகளை சொந்தக்காரர் மூலம் பெற்றுக் கொள்வதில் அவர்கள் அறிவாளிகளாக இருந்தார்கள். அந்த முறையில் சம்பவங்கள் எப்படியிருந்தாலும் தங்களுடைய விடை சரியென்று தோன்

றத்தக்கதாக சொல்வதற்கு சமர்த்தராயிருந்தார்கள். அதனால் இந்த கல்தேயர் ராஜா சொப்பனத்தை சொல்கையில் அதன் அர்த்தத்தைக் கூறி தங்களுடைய மேன்மையை தேடிக் கொள்ள விரும்பினார்கள். தங்களுக்கு அளவு கடந்த சாமர்த்தியம் உண்டு என்றும், மனிதனின் சக்தியால் காரியங்கள் சிந்திக்காலமென்றுள்ள அவர்களுடைய வாதத்திற்கு இது எதிராக இருந்தது. தனது சொப்பனத்தைச் சொல்ல அவர்களுக்கு சக்தியில்லை என்று வெளிப்பட்டது. ஆகையால் ராஜாவிற்கு அவர்களில் உள்ள நம்பிக்கையும் போய்விட்டது. ஆகையால் அவர்கள் பொய்யும், புரட்டும் சொல்லி காலதாமதம் பண்ண பிரயாசப்படுகிறார்கள் என்று ராஜா நினைத்தான். ராஜா இந்தக் காரியம் மறக்கவோ, விட்டுவிடவோ சமயம் வந்தால் நல்லது என்று அவர்கள் ஆலோசித்திருப்பார்கள். அவர்கள் சொப்பனத்தைச் சொல்ல சொன்னதிலிருந்து, தங்களுக்கு தங்கள் தேவர்களோடு சம்மந்தம் உண்டென்று சொன்ன கல்தேய மந்திரவாதிகளுடைய வாக்கு பொய்யென்று வெளிப்பட்டது.

கல்தேயர் ராஜா சமூகத்தில் பிரதியுத்தரமாக; ராஜா கேட்கும் காரியத்தை அறிவிக்கத்தக்க மனுஷன் பூமியில் ஒருவனும் இல்லை, ஆகையால் மகத்துவமும் வல்லமையுமான எந்த ராஜாவும் இப்படிப்பட்ப காரியத்தை ஒரு சாஸ்திரியிடத்திலாவது, ஜோசியரிடத்திலாவது கல்தேயரிடத்திலாவது கேட்டதில்லை. ராஜா கேட்கிற காரியம் மிகவும் அருமையானது. மாம்சமாயிருக்கிறவர்களோடு வாசம் பண்ணாத தேவர்களே ஒழிய ராஜ சமூகத்தில் அதை அறிவிக்கத்தக்கவர்கள் ஒருவரும் இல்லை என்றார்கள். (தானி 2:10-11)

தேவர்களுக்கு அல்லாமல் மற்றுயாருக்கும் சொப்பனம் திரும்பவும் சொல்ல முடியாது என்று கல்தேயர் சொன்ன போது அவர்களுக்கு தேவர்களோடு கூட யாதொரு சம்மந்தமும் இல்லை என்று சம்மதித்தார்கள் மட்டுமல்ல பொய்யும், புரட்டும் சொல்லுகிறவர்கள் என்று ராஜா காட்டின குற்றம் உண்மை என்று நிரூபிக்கவும் செய்தார்கள்

ராஜா அவர்கள் மேல் சுமத்தின தண்டனை சரிதான என்று நாம் நினைக்கலாம். மந்திரவாதிகளும்,சூனியக்காரும், ஜோசியரும் அதிகம் பேராயிருந்தார்கள். அவர்கள்

பணக்காரரும், படித்தவர்களும் நாகரிகம் உள்ளவர்களுமாயிருந்தார்கள். ஆகையால் அவர்களின் அழிவு ராஜ்யத்துக்குத்தானே நஷ்டம் உண்டாகுகிறதாயிருக்கும். தண்டனை கொடுக்கும் போது எவ்வளவு கஷ்டம் சம்பவிக்கும் என்பது சிந்திக்க முடியாது. ஆனால் பாக்கியமாக இது பரிகரிக்கப்பட்டது. பார்வோனின் சொப்பனம் எகிப்தின் மந்திரவாதிகளுக்கோ, தேவர்களுக்கோ சொல்ல முடியாதிருக்கும் போது எபிரேய அடிமையான யோசேப்பு சொப்பனத்தை வியார்த்தி பண்ணினான். அது போல் பாபிலோன் ராஜாவின் சொப்பனம் அங்குள்ள சாஸ்திரிகளுக்கும், ஞானிகளுக்கும் சொல்லவோ, வியாக்கியானம் பண்ணவோ முடியாதிருந்த போது, ஒரு எபிரேய அடிமையைக் கொண்டு காரியம் அறிய முடிந்தது. தானியேலோடு முதலாவது இக்காரியம் கேட்காதது ஏன் என்று நமக்கு அறிய முடியவில்லை. ஆரம்பத்தில் இந்த விஷயம் அவன் அறிந்திருந்ததாக தோன்றவில்லை. அவனை கொலை செய்யப்பிடித்துக் கொண்டு போக பிரதானிகள்ன் தலைவன் வருமட்டும் அவன் இக்காரியம் அறியவில்லை. (தானி2:14-15) தேவனின் கரங்கள் அதிசயமாக இதில் கிரியை செய்தது. பாபிலோனிலுள்ள சாஸ்திரிகள் மூலம் வெளிவந்த புறஜாதிளின் பொய்யான சுதந்தரவாதங்கள் வெளியே கொண்டு வரவும், அவர்களின் சக்தியில் வாய்மையை, அவர்களைக் கொண்டு அறிக்கை இடவும், அது தேவன் எடுத்துக் கொண்ட சந்தர்ப்பமாக இருந்தது. தானியேலை முதலாவதே ராஜா அழைத்திருந்தால் இந்த மாதிரி சோதனையிலிருந்து அவர்கள் தப்பியிருப்பார்கள். ஆரியோடு எல்லாரையும் (ஞானிகளை) கொலை செய்ய வேண்டும் என்ற போது தானியேல் தடைபடுத்தினான். ஆனால் ராஜாவின் பிரதானிகளின் தலைவன் பாபிலோனின் ஞானிகளை கொலை செய்யப்புறப்பட்ட ராஜாவினுடைய தலையாரிகளுக்கு அதிபதியாகிய ஆரியாகோடே தானியேல் யோசனையும், புத்தியுமாய்ப் பேசி இந்தக் கட்டளை ராஜாவினால் இத்தனை அவசரமாய் பிறந்ததற்குக் காரணம் என்ன என்று கேட்டான். அப்பொழுது ஆரியோகு தானியேலுக்கு காரியத்தை அறிவித்தான். தானியேல், ராஜாவினடத்தில் போய், சொப்பனத்தின் அர்த்தத்தை ராஜாவுக்குக் காண்பிக்கும்படித் தனக்கு தவணை கொடுக்க விண்ணப்பம் பண்ணினான்.(தானி2:14-16)

தானியேலின் விசுவாசத்தை கவனியுங்கள். ராஜா தன் சொப்பனம் விவரித்துச் சொல்ல அவன் விரும்பவில்லை. அவன் சமயம் மட்டும் தான் விரும்பினான் பரிபூரணமான தைரியத்தோடு சொப்பனம் மடடும் அல்ல. அதன் அர்த்தத் தையையும் அறிவிக்கலாம் என்றான்.ராஜா அவனுக்கு அனு மதி கொடுத்தான்.

முழு இரவு ஜெபம்

பிறகு தானியேல் தன் வீட்டிற்கு போய், தானும் தன் தோழரும் பாபிலோனின் மற்ற ஞானிகளோடே கூட அழியா தபடிக்கு இந்த மறைபொருளைக் குறித்துப் பரலோகத்தின் தேவனை நோக்கி இரக்கம் கேட்கிறதற்காக அனனியா, மீஷ வேல் அசரியா என்னும் தன்னுடைய தோழருக்கு இந்தக் காரியத்தை அறிவித்தான்.*(தானி 2:17-18)*

அது மிகவும் விலையுள்ள ஒரு ஜெபமாக இருந்தது. தானியேல் தனிமையாக ஜெபித்தாலும் தேவன் கேட்பார். என்றாலும் சிநேகிதர்கள் சேர்ந்து ஜெபித்தார்கள். அவனு டைய மற்ற மூன்று சினேகிதரும் அவனைப்போல் இந்தக் காரியத்தில் கவலை உள்ளவர்களாய் இருந்தபடியால், அவர் கள் சேர்ந்துள்ள ஜெபத்தை அவன் விரும்பினான்.

அவர்களுடைய ஜீவனும் இதே தராசில் தொங்குகிறதாக இருந்தது. தானியேலுக்கு அவன் ராஜாவோடு சொன்ன வார்த் தையை நிறைவேற்ற முடியாதென்றால் நான்கு பேரும் அழிந்து போவார்கள்.அவர்களின் ஜீவன் ஆபத்தில் இருந்தது என்பது மட்டுமல்ல. இன்னொரு காரியம் கூட தேவை இருந் தது. தானியேல் இந்தக் காரியத்தில் ஜெயம் பெறாமல் இருந் தால்,உலகம் அறிய வேண்டிய பெரிய வெளிப்படுத்தலை இழக்க வேண்டியதாயிருந்திருக்கும். அந்த வெளிப்படுத்தலும் வியாக்கியானமும் இந்த சொப்பனத்தில் உள்ளடக்கி வைக்கப் பட்டிருந்தது. அதாவது தீர்க்கத்தரிசனமும், சரித்திர விஷயமு மானது.

ஜாதிகளுடைய காலம்

ஜெபம் எப்போது ஆரம்பித்தது என்று சொல்லப்பட வில்லை. ஆனால் இரவு அதிக நேரம் ஆகும் வரை, இல்லை யென்றால் ஜெபித்த காரியங்களுக்கு பதில் கிடைக்கும் வரை

அந்த ஜெபம் நீண்டு நின்றது. அதற்கு பிறகு அவர்கள் இளைப் பாறினார்கள். பின்பு இராக்காலத்தில் தரிசனத்தில் தானியே லுக்கு மறை பொருள் வெளிப்படுத்தப்பட்டது. அப்போது தானியேல் பரலோகத்தின் தேவனை ஸ்தோத்தரித்தான். (தானி 2:19)

தனக்கு சொப்பனம் வெளிப்பட்டதில் தானியேல் கொஞ் சமும் பெருமைப்படவில்லை. அவன் ராஜாவினிடம் தீவிரமா கப் போய் ராஜா பார்த்ததும், இதுவும் சரிதானோ என்று கேட்கவும் இல்லை. வேத புத்தகத்தில் படிப்பதில் மிகவும் அழகான ஒன்று அவனுடைய துதிஸ்தோத்திரங்கள். அது அவன் இதயத்திலிருந்து புறப்பட்டது. ஜெபத்துக்கு கிடைத்த பதிலுக்காக தானியேல் ஸ்தோத்திரம் செலுத்தினான்.

தானியேல் பரலோகத்தின் தேவனை துதித்து சொன்னது தேவனுடைய நாமத்துக்கு என்றென்றைக்கும் உள்ள சதாகா லங்களிலும் ஸ்தோத்திரம் உண்டாவதாக! 1. ஞானமும் வல்ல மையும் அவருக்கே உரியது. 2. அவர் காலங்களையும்,சமயங் களையும் மாற்றுகிறவர். 3. அவர் ராஜாக்களைத் தள்ளி ராஜாக் களை ஏற்படுத்துகிறவர். 4. ஞானிகளுக்கு ஞானத்தையும் 5. அறிவாளிகளுக்கு அறிவையும் கொடுக்கிறவர். 6. அவர் ஆழ மும் மறைபொருளுமானதையும் வெளிப்படுத்துகிறவர் அவர் இருளில் இருக்கிறதை அறிகிறவர். 7. வெளிச்சம் அவரிடத்தில் தங்கும்.

என் பிதாக்களின் தேவனே நீர் எனக்கு ஞானமும்,வல்ல மையும் கொடுத்து,நாங்கள் உம்மிடத்தில் வேண்டிக்கொண் டதை இப்போது எனக்கு அறிவித்து, ராஜாவின் காரியத்தை எங்களுக்கு தெரிவித்த படியினால் உம்மை துதித்து புகழுகி றேன் என்றான்.(தானி2:20-23 வரை)

தானியேலுக்கு மட்டும் தான் வெளிப்படுத்தல் இருந்தா லும், அவன் தனிமையாக அதனுடைய மேன்மையை எடுத் துக் கொள்ளாமல் அவனுடைய சிநேகிதர்களோடு சேர்ந்து கர்த்தரைத் துதித்தான். அடுத்த நாள் காலையில் தானியேல் ஆரியோகைக் கண்டு பாபிலோனில் உள்ள ஞானிகளை அழிக்காதேயும். என்னை ராஜாவின் முன்பாக அழைத்துக் கொண்டு போம்.ராஜாவுக்கு நான் அர்த்தத்தை தெரிவிப்பேன்

என்றான். (தானி 2:24)

ஆரியோகினிடத்தில் பாபிலோன் ஞானிகளை அழிக்கக் கூடாதென்பது தான் தானியேலின் முதல் வேண்டுகோள். அப்படி அவர்களுடைய நடுவில் ஒரு பக்தன் இருந்ததால் அவர்கள் அழிவிலிருந்து மீட்கப்பட்டனர். பவுலின் நிமித்தம் கப்பலில் சிறைவாசிகளும், கப்பல் வேலைக்காரர்களும் அழிவிலிருந்து தப்பினார்கள். அது போல் தானியேல் நிமித்தம் பாபிலோன் ஞானிகளும் அழிவிலிருந்து தப்பிக்கொண்டனர். (அப் 27:24)

வேத வசனத்தின் உபதேசம் நீதிமான்களின் மூலம் துன்மார்க்கர் ஆசிர்வாதம் பெற்றுக் கொள்ளுகிறார்கள் என்பது தான். யோசேப்பின் நிமித்தம் போத்திபாரின் குடும்பம் ஆசிர்வதிக்கப்பட்டது. (ஆதி 39:5) பத்து நீதிமான்கள் இருந்தால் அவர்களின் நிமித்தம் சோதோம் அழிக்கப்படமாட்டாது. அது போல இன்றைக்கு உலகத்தில் சில நீதிமான்களின் நிமித்தம் உலகம் அழிக்கப்படாமல் காக்கப்பட்டு வருகிறது. சபையின் ஆரம்பத்தை தொடர்ந்து உலகம் நியாயத்தீர்ப்புக்காய் ஆயத்தப்பட்டுக் கொண்டிருக்கிறது. தானியேலின் நிமித்தம் பாபிலோனில் உள்ள ஞானிகள் அழிவிலிருந்து காக்கப்பட்டது போல நாம் இயேசுவின் மூலம் அழிவிலிருந்து மீட்கப்பட்டிருக்கிறோம்.

ஆரியோகு தானியேலை ராஜாவின் முன்பாக தீவிரமாய் அழைத்துக்கொண்டு போய்; சிறைப்பட்டு வந்த யூதேயா தேசத்தாரில் ஒரு புருஷனைக் கண்டு பிடித்தேன்; அவன் ராஜாவுக்கு அர்த்தத்தைத் தெரிவிப்பான் என்றான்.(தானி 2:25)

ராஜா பெல்ஷாத்சாரென்னும் நாமமுள்ள தானியேலை நோக்கி நான் கண்ட சொப்பனத்தையும், அதின் அர்த்தத்தையும் நீ எனக்கு அறிவிக்கக் கூடுமா என்று கேட்டான். தானியேல் ராஜசமூகத்தில் பிரதியுத்தரமாக ராஜா கேட்கிற மறை பொருளை ராஜாவுக்குத் தெரிவிக்க ஞானிகளாலும், ஜோசியராலும், சாஸ்திரிகளாலும், குறி சொல்லுகிறவர்களாலும் கூடாது. மறை பொருள்களை வெளிப்படுத்துகிற பரலோகத்திலிருக்கிற தேவன் கடைசி நாட்களில் சம்பவிப்பதை ராஜாவாகிய நேபுகாத்நேச்சாருக்குத் தெரிவித்திருக்கிறார். உம்முடைய சொப்பனமும் உமது படுக்கையின் மேல் உம்முடைய

தலையில் உண்டான தரிசனங்கள், என்னவென்றால் ராஜாவே உம்முடைய படுக்கையின் மேல் உண்டான தரிசனங்கள் எனக்கு வெளிப்பட்டது. உயிரோடிருக்கிற எல்லாரைப் பார்க்கிலும் எனக்கு அதிக ஞானம் உண்டு என்பதினால் அல்ல. அர்த்தம் ராஜாவுக்குத் தெரிய வரவும் உம்முடைய இருதயத்தின் நினைவு களை நீர் அறியவும் இந்த மறைபொருள் எனக்கு வெளிப்பட்டது

ராஜா தானியேலோடு நான் கண்ட சொப்பனமும், அர்த்த மும் சொல்ல உனக்கு முடியுமா என்று கேட்டான். காரணம் தானியேலை மற்ற ஞானிகளைப் போல் ராஜா நினைத்திருந் தான். ஒருவேளை அவன் மற்ற ஞானிகளை விடக்கூடுதல் சாமர்த்தியக்காரனும் அதனால் சொப்பனம் சொல்லவும், வியாக்கியானம் செய்யவும் முடியும் என்றும் நினைத்தான். மற்ற ஞானிகளுக்கு என் சொப்பனத்தைச் சொல்லவும், வியார்த்தி பண்ணவும் முடியவில்லை என்று சொல்லக்கூடிய சந்தர்ப்பத்தை தானியேலுக்குக் கர்த்தர் கொடுத்தார். இது அவர் களுடைய சக்திக்கு அப்புறமான மறை பொருள். இதை வெளிப் படுத்த தேவனுக்கு மட்டும் முடியும். அதற்குள்ள காரணம் அது எதிர் காலத்தைக் குறித்துள்ள காரியங்கள். ராஜா தனக்கு இக்கா ரியத்தில் கனம் கொடுக்க தானியேல் விரும்பவில்லை. ஆகை யால் மறைபொருள்கள் வெளிப்பட்டது தன்னுடைய ஞானத் தால் அல்லவென்றும், பாபிலோன் ராஜ்யத்திற்கு எதிர் காலத் தில் சம்பவிப்பது என்ன வென்று கர்த்தர் வெளிப்படுத்தினதாக சொல்லுகிறான் மட்டுமல்ல கடைசி காலத்தில் என்ன சம்பவிக் கும் என்று ராஜா அறிய வேண்டுமென்றும் தேவன் வெளிப்ப டுத்த சித்தம் கொண்டார் என்றான். தானி 2:26-30

சொப்பனம்

ராஜாவே நீர் ஒரு பெரிய சிலையைக் கண்டீர், அந்த பெரிய சிலை மிகுந்த பிரகாசமுள்ளதாயிருந்தது. அது உமக்கு எதிரே நின்றது. அதன் ரூபம் பயங்கரமாயிருந்தது. அந்தச் சிலையின் தலை பசும் பொன்னும் அதன் மார்பும் அதன் புயங்களும் வெள்ளியும் அதன் வயிறும் அதன் தொடையும் வெண்கலமும், அதன் கால்கள் இரும்பும் அதன் பாதங்கள் பாதி இரும்பும் பாதி களிமண்ணுமாயிருந்தது. நீர் பார்த்துக் கொண்டிருக்கும் போதே, கைகளால் பெயர்க்கப்படாத ஒரு கல் பெயர்ந்து உருண்டு வந்தது. அது அந்தச்சிலையை இரும்

பும் களி மண்ணுமாகிய அதன் பாதங்களில் மோதி, அவை களை நொறுக்கிப்போட்டது. அப்பொழுது அந்த இரும்பும் , களிமண்ணும், வெண்கலமும், வெள்ளியும், பொன்னும் ஏக மாய் நொறுங்குண்டு , கோடை காலத்தில் போரடிக்கிற களத் திலிருந்து பறந்து போகிற பதரைப் போலாயிற்று. அவைக ளுக்கு ஒரு இடமும் கிடையாதபடி காற்று அவைகளை அடித் துக் கொண்டு போயிற்று. சிலையை மோதின கல்லோவென் றால், ஒருபெரிய பர்வதமாகி பூமியையெல்லாம் நிரப்பிற்று. *(தானி 2:31-35).*

சொப்பனத்தை ராஜாவினிடத்தில் சொன்ன உடன் ராஜா வுக்கு பெரிய சிந்தனை உண்டாயிற்று. தூக்கத்தில் தான் கண்ட சிலையின் வர்ணனையை சரியாய்ச்சொன்னான். அவன் தானி யேலைக்குறித்து எப்படி நினைத்திருப்பான்? ராஜா மிகவும் ஆச்சரியப்பட்டான். ஆகையால் ராஜாவுக்கு அதனுடைய அர்த்தத்தை தெரிவிப்பதிலும் அவனிடம் நம்பிக்கை ஏற்பட் டது.

சொப்பன வியாக்கியானம்

1. தலை=பாபிலோன் சாம்ராஜ்யம்

   ராஜாவே நீர் ராஜாதி ராஜாவாய் இருக்கிறீர். பர லோகத்தின் தேவன் உமக்கு ராஜரீகத்தையும், பராக்கிர மத்தையும், வல்லமையையும், மகிமையையும் அருளி னார். சகல இடங்களிலுமுள்ள மனு புத்திரரையும் வெளி யின் மிருகங்களையும், ஆகாயத்துப்பறவைகளையும் அவர் உமது கையில் ஒப்புக்கொடுத்து உம்மை அவைக ளையெல்லாம் ஆளும்படி செய்தார்.

1. பொன்னான அந்த தலை நீரே. தானி *2:37-38*

2. மார்பும், புயங்களும் வெள்ளி - மேதியா, பெர்சியா ராஜ் யங்கள். உமக்குப் பிறகு கீழ்த்தரமான வேறு ஒரு ராஜ்யம் தோன்றும்.

3. வயிறும், தொடையும் வெண்கலம் - கிரேக்கு ராஜ்யம் பூமியையெல்லாம் ஆண்டு கொள்ளும் வெண்கலமான ராஜ்யம்.

4. கால் இரும்பு - ரோம் ராஜ்யம் நான்காம் ராஜ்யம் இரும் பைப் போல் உரமாய் இருக்கும். இரும்பு எல்லாவற்றை யும் எப்படி நொறுக்கி சின்னா பின்னம் ஆக்குகிறதோ,

அப்படியே இது நொறுக்கிப்போடுகிற இரும்பைப் போல அவைகளையெல்லாம் நொறுக்கி தகர்த்துப் போடும்.

5. பாதங்களும் கால் விரல்களும் பாதி இரும்பும், பாதி குயவனின் களிமண்ணும் - பிரிக்கப்பட்ட ரோம். அந்த ராஜ்யம் பிரிக்கப்படும். களிமண்ணோடு இரும்பு கலந்திருக்க நீர் கண்டபடியே இரும்பின் உறுதியில் கொஞ்சம் அதிலே இருக்கும். கால் விரல்கள் பாதி இரும்பும், பாதி களி மண்ணு மாய் இருந்தது என்ன வென்றால் அந்த ராஜ்யம் ஒரு பங்கு உரமும், ஒரு பங்கு நெரிசலுமாக இருக்கும்.

நீர் இரும்பை களிமண்ணோடே கலந்ததாக கண்டீரே. அவர்கள் மற்ற மனுஷரோடே சம்மந்தம் கலப்பார்கள். ஆகிலும் களிமண்ணோடு இரும்பு கலவாதது போல அவர்கள் ஒருவரோடொருவர் ஒட்டிக் கொள்ளாதிருப்பார்கள்.

6. கல் - கிறிஸ்துவினுடைய ஆயிரம் வருட அரசாட்சியின் ராஜ்யம். அந்த ராஜாக்களின் நாட்களிலே பரலோகத்தின் தேவன் என்றென்றைக்கும் அழியாத ஒரு ராஜ்யத்தை எழும்பப்பண்ணு வார்; அந்த ராஜ்யம் வேறு ஜனத்துக்கு விடப்படுவதில்லை. ஒரு கல் கையால் பெயர்க்கப்படாமல் மலையிலிருந்து பெயர்ந்து உருண்டு வந்து இரும்பையும், வெண்கலத்தையும், களிமண்ணையும், வெள்ளியையும், பொன்னையும் நொறுக்கியதை நீர் கண்டீரே. அப்படியே அது அந்த ராஜ்யங்களையெல்லாம் நொறுக்கி தானோ என்றென்றைக்கும் நிற்கும்.

இனி மேல் சம்பவிக்கப் போகிறதை மகா தேவன் ராஜாவுக்கு தெரிவித்திருக்கிறார்; சொப்பனம் நிச்சயம், அதன் அர்த்தம் சத்தியம் என்றான். தான் கண்ட சொப்பனத்தை தானியேல் எடுத்துச் சொல்லுவது கேட்ட போது நேபுகாத்நேச்சார் ஆச்சரியப்பட்டாலும், அவனுடைய ராஜ்யம் அழியும் என்றும், அதை விட கீழத்தரமான வேறொரு ராஜ்யம் எழும்பும் என்றும், கடைசியாக எல்ல சாம்ராஜ்யங்களும் அழிந்து.

[illegible] என்றும் உள்ள [illegible] விசுவாசிகளைக் [illegible] [illegible] ராஜா நீதியில் அறிந்து [illegible]. இதன் விசுவாசிகளை [illegible] காலத்திலிருந்துதானும் [illegible] தங்க [illegible] ராஜாவினுடைய ராஜ்யத்திலுள்ள [illegible], [illegible], [illegible] நேபுகாத்நேச்சாரின் ராஜ்யத்திற்கு [illegible] [illegible] என்றும், ஜாதிகளின் அதிபதிகள் [illegible] அறிந்து [illegible] என்றும் [illegible] சொப்பன [illegible]. நேபுகாத்நேச்சாரின் சொப்பனத்தில் பொற்சிலையான தலையிலிருந்து ஜாதிகளின் காலத்தில் ஒரு பாடம் நமக்கு உதவுகிறது. ஜாதிகளுடைய காலம் என்ற பதம் தானியேலின் புத்தகத்தில் இல்லை. இது நமது கர்த்தர் உபயோகித்த ஒரு புதிய வார்த்தை பதம். A.D 70-ல் நடந்த எருசலேமின் அழிவோடு சம்பந்தப்படுத்தி ஒலிவ மலையில் வைத்து நமது கர்த்தர் சொன்ன தீர்க்கதரிசனத்தை தான் இது. புறஜாதிகளின் காலம் நிறைவேறும் வரைக்கும், புறஜாதிகள் எருசலேமை மிதிப்பார்கள். (லூக்கா 21:24) புறஜாதிகளின் காலம் என்ற பதத்தில் இயேசு காலத்தின் ஒரு தனிமையான சமயத்தை வெளிப்படுத்துகிறார். அதாவது யூத ஜாதிக்கு ராஜா இல்லாத காலமாகும். அது இந்த காலம் என்று ஓசியா கூறுகிறார்.

இந்த விதத்தில் இஸ்ரவேல் புத்திரர் அநேக நாள் ராஜா இல்லாமலும், அதிபதி இல்லாமலும், பலியில்லாமலும், சிலை இல்லாமலும், ஏபோத்து வஸ்திரம் இல்லாமலும், தேராபீம் இல்லாமலும் இருப்பார்கள். பின்பு இஸ்ரவேல் புத்திரர் திரும்பி, தங்கள் தேவனாகிய கர்த்தரையும், தங்கள் ராஜாவாகிய தாவீதையும், கடைசி நாட்களில் கர்த்தரையும், அவருடைய தயவையும் நாடி அஞ்சிக்கையாய் வருவார்கள். (ஓசியா 3:4-5) புற ஜாதிகளின் காலம் A.D 70-ல் எருசலேமின் அழிவோடு ஆரம்பிக்கவில்லை. அது B.C. 606-ல் தானியேல் பாபிலோனுக்கு அடிமையாய் கொண்டு போகப்பட்ட போது ஆரம்பித்து, கர்த்தர் திரும்பி வந்து ஆயிரம் வருட ஆளுகை ஸ்தாபிக்கிறது வரை நீண்டு நிற்கும். நேபுகாத்நேச்சார் இந்த சொப்பனத்தில் காண்கிற பர்வதத்திலிருந்து பெயர்ந்து வருகிற கல் இந்தக் காரியத்தை வெளிப்படுத்துகிறது. புற ஜாதிகளுடைய காலம் என்ற பதமும், புற ஜாதிகளுடைய நிறைவு உண்டாகும் வரைக்கும் இஸ்ரவேலில் ஒரு பங்குக்கு கடின

மான மனதுண்டாயிருக்கும் (ரோமர் 11:25) என்று பவுல் சொல்லுகிற பதமும் தம்மில் கலந்து குழப்பக்கூடாது. புற ஜாதிகளின் பூரண நிறைவின் காலமும், ஜாதிகளின் காலமும் தம்மில் ஐக்கியமில்லை. ஆனால் இந்த யுகத்தில் உள்ள பரி சுத்த ஆவியால் கிறிஸ்துவின் சரீரத்தின் அவயவமாய் அழைத்து வேறுபடுத்தப்பட்ட ஜாதிகள் தான் சபை.

ஜாதிகளின் பூரண தொகை என்று சொல்லும்போது அதைத்தான் குறிக்கிறது. அவர்கள் தொகை பூரணமாகும் போது கர்த்தர் தமது சபையை எடுப்பார். ஜாதிகளின் தொகை அன்று பூரணப்படுத்தப்பட்டிருக்கும். இந்த திவ்ய நிகழ்ச்சி நிரல் அப் 15:13-17- சொல்லப்பட்டிருக்கிறது.

மனிதனின் நாட்கள்

இந்த யுகத்தை மனிதனின் நாட்களாக பரிசுத்த வேதாக மத்தில் சொல்லியிருப்பதால் இந்தப் பதம் ஜாதிகளின் முழுக் காலத்தையும் அர்த்தப்படுத்துகிறது. இது மனிதனை தேவ னாக உயர்த்துகிற காலத்தையே காட்டுகிறது. தனது ரூபமாய் தூரா சமவெளியில் நேபுகாத்நேச்சார் பொற்சிலையை உயர்த்தி அதை நமஸ்கரிக்க தனது ராஜ்யத்தில் உள்ள அனை வரோடும் கட்டளையிடப்பட்டது முதல் (தானி 3:5) அந்திக் கிறிஸ்துவாகிய மிருகத்தின் சிலையை நமஸ்கரிக்க கள்ளத் தீர்க்கத்தரிசி அனைவரோடும் கட்டளையிடுவது வரை. (வெளி13:13-17) ஜாதிகளின் காலத்தின் சுபாவத்திற்கு தகுதி யான ஏக சாயல் ஒரு மனிதனின் சிலைதான்.

சரித்திரம் நிறைவேறுதல்

இந்த சிலை நான்கு உலக சாம்ராஜ்யங்களை அவைக ளின் ஒழுங்கிலும், ஐக்கியத்திலும் காட்டுகிறது. நேபுகாத்நேச் சாரின் பாபிலோன் சிங்காசனத்திற்கு உள்ள உயர்வு முதல் கிறிஸ்துவின் இரண்டாவது வருகை வரை உலகத்தில் நான்கு சாம்ராஜ்யங்கள் மட்டுமே உண்டாயிருக்கும். நான்கு மட்டும் என்பது சிலையின் நான்கு உலோகத்திலிருந்து இது வெளியா கிறது. நெப்போலியன், கைசர் மற்றும் பலரும் ஐந்தாவது ஒரு உலக சாம்ராஜ்யத்தை ஸ்தாபிக்க விரும்பினார்கள். ஆனால் அவர்கள் முயற்சி வீணாய்போயிற்று. இந்த சாம்ராஜ்யங்களின் தொகைகள் மட்டும் அல்ல. அவைகளின் பெயர்களும் அவை களின் ஆளுகை ஒழுங்கில் எழுதப்பட்டிருக்கிறது.

பாபிலோன் சாம்ராஜ்யம்

"பொன்னான அந்த தலை நீரே". என்று தானியேல் சொல்லியிருப்பதிலிருந்து அவன் வெளிப்படுத்தின சிலையின் மூலம் தானியேல் சுட்டிக் காண்பிக்கிற முதல் ராஜ்யம் நேபுகாத்நேச்சாரின் பாபிலோன் சாம்ராஜ்யம், இதன் வியாக்கியானம் படிக்கும் போது தானியேல், ராஜ்யமென்றும், சாம் ராஜ்யமென்றும் மாற்றி, மாற்றி சொல்வதை பார்க்கிறோம். காரணம் ஒவ்வொரு சாம்ராஜ்யத்திலும் பல பெரிய ராஜாக்கள் ஆளுகை செய்து கொண்டிருந்தார்கள். உலக சரித்திரத்தில் இவைகள் பெரிய ராஜ்யங்களாக சொல்லப்பட்டிருக்கிறது. இக்காலத்தில் சக்கரவர்த்தி என்றுள்ள பட்டப்பெயர் மிகவும் சுருக்கமாகத் தான் இருக்கிறது. உலக சாம்ராஜ்யங்கள் இக்காலத்தில் மிகவும் சின்ன ராஜ்யங்களாக ஆக்கப்பட்டதினால் தான் இது சிலையைக் குறித்துள்ள பாகங்களின் நிறைவேறுதல் என்றறியலாம். அதின் பாதங்களும் கால் விரல்களும் பாதி குயவனின் களி மண்ணும் பாதி இரும்புமாக இருந்தது. அவைகளையே ராஜ்யங்கள் என்றழைக்கிறார்கள். 44 ஆண்டு ஆளுகையின் பிறகு B.C 561-ல் நேபுகாத்நேச்சார் இறந்தார். அவனுக்குப் பிறகு அவனுடைய மகன் துன்மார்க்கமான மெரோடாக் ராஜாவானான். இரண்டு வருட ஆளுகைக்கு பிறகு அவன் மெரிகிளிஷார் என்ற சியாலானால் கொல்லப்பட்டான். தொடர்ந்து மெரிகிளிஷியன் நான்கு ஆண்டுகள் ஆண்டபின் B.C 556-ல் ஒரு யுத்தத்தில் வைத்து அவனும் கொல்லப்பட்டான். அவனுக்குப் பிறகு மகன் லாபெனோ சார்பெண்டு என்ற துர்பாக்கியவான் அதிகாரத்தில் வந்தான். 9 மாதத்திற்குப் பிறகு அவனும் கொல்லப்பட்டான். நேபுகாத்நேச்சாரின் இன்னொரு மகனான நபோனிடஸ் என்பவன் மெரிகிளிஷாரின் விதவையை விவாகம் செய்திருந்தான். அவன் சிங்காசனம் சொந்தமாக்கி 27 வருடம் ஆளுகை செய்தான். இந்தக் காலம் எல்லாம் பெர்சியரின் படையெடுப்பு பாபிலோனில் எற்பட்டது. நபோனிடஸ் படைவிரர்களோடு கூட அந்நிய தேசத்தில் இருக்கும் போது பாபிலோனை பிடித்து அவன் தன் மகன் பெல்ஷாத்சாருக்கு ராஜ்யம் கொடுத்து அவனை இரண்டாவது ஆளுகை கர்த்தனாக நியமித்தான். பாபிலோன் பட்டணம் அவனுடைய ஆளுகையின் கீழ் இருந்தது. அதனால் தான் பெல்ஷாத்சார் தானியேலை ராஜ்யத்தில் மூன்றாவது அதிபதியாக ஏற்படுத்த நேர்ந்தது. பெல்ஷாத்சார் இரண்டாவது ஆளாக இருந்து காரியங்களை நடத்தினான். இதிலிருந்து நேபு

காத்நேச்சாரை பொன்னான தலையென்று அழைப்பது பயன் இல்லாமல் ஆனது. அவனுக்குப் பிறகு வந்தவர்கள் எல்லோரும் நேபுகாத்நேச்சாரோடு ஒத்துப்பார்த்ததில் அவனை விட கீழானவர்களாக இருந்தார்கள். பெல்ஷாத்சாரின் மரணத்தோடு கூட பாபிலோன் சாம்ராஜ்யம் அஸ்தமித்தது.

அழிக்கப்பட்ட இந்த ராஜ்யத்தின் முன் நிலைமையைக் குறித்து சரித்திர வாயிலாக எனக்கு கிடைத்த அறிவை உங்களுக்கு தெரிவிக்க விரும்புகிறேன். இந்த சாம்ராஜ்யம் B.C 606 முதல் 538 வரை உலகத்தில் நல்ல பெருமையாக நின்ற ஒரு சாம்ராஜ்யம். இதை சிறப்புறச் செய்தவன் நேபுகாத்நேச்சார். அவனுடைய சொப்பனத்தை வியார்த்தி பண்ணும் போது தானியேல் ராஜாவே, நீர் ராஜாதிராஜாவாயிருக்கிறீர். பரலோகத்தின் தேவன் உமக்கு ராஜரீகத்தையும், பராக்கிரமத்தையும், வல்லமையையும், மகிமையையும் அருளினார் என்கிறான். (தானி 2:37) சரித்திரத்தில் பெயர் பெற்ற கோட்டைகளில் ஒன்று பாபிலோன் கோட்டை. இது ஒரு சமசதுரமான பட்டணமாக இருந்தது. ஒரு பக்கத்தில் 15 மைல் வீதம் சுற்றிலும் 60 மைல் சுற்றளவும் 87 அடி பருமனும், 100 அடி உயரமும் உள்ள செங்கல் மதில்லால் சுற்றப்பட்டிருந்தது. மதிலின் மேல் 250 கோபுரங்கள் கட்டப்பட்டிருந்தது. ஆறு குதிரைகள் ஒன்றாக நிரந்து இடசாரி, வலசாரி போகக் கூடிய அளவில் மதிலின் மேல் பாகம் அகலமாக காணப்பட்டது. இந்த மதிலின் வெளியில் பட்டணத்தை சுற்றி ஒரு பெரிய கிடங்கு (அகழி) வெட்டப்பட்டிருந்தது. யூப்ரடீஸ் நதி தண்ணீரைக் கொண்டு வந்து அந்த கிடங்கை நிரப்பியிருந்தார்கள். அந்த மதிலின் உயரம் 350 அடி. ஒவ்வொரு கோபுரங்களும் 87 அடி உயரம் உள்ளதாக இருந்தது. மதிலைச் சுற்றிலும் 72 வெண்கல கதவுகள் போடப்பட்டிருந்தது. பட்டணத்தின் உள் பாகத்தில் 25 பிரதான பாதைகள் வடக்கிலிருந்து தெற்கு வரை 150 அடி வீதியில் போடப்பட்டிருந்தது. யூப்ரட்டீஸ் நதி பட்டணத்தின் நடுவில் ஓடி பட்டணத்தை இரண்டாகப்பிரித்தது. ஆற்றில் இறங்குகிறதற்கு அழகான படிகளும் மதில்களால் அடைக்கப்பட்டிருந்தது. முக்கியமான பூந்தோட்டங்களின் கடைசியில் பட்டணத்தின் இரண்டு பக்கங்களிலும் பெரிய வாசல்களும் சூரிய உதயத்திலும், அஸ்தமனத்திலும், திறக்கவும் அடைக்கவும் செய்யும்போது அக்கினி ஜுவாலை போல மின்னுகிற வெண்கலக் கதவுகளும் போடப்பட்டிருந்தது. பட்டணத்தின் உள் பாகத்தில் ஓடிக் கொண்டிருந்த யூப்ரட்பீஸ் நதியில் ஒரு

பெரிய பாலம் கட்டி பட்டணத்தின் இரு பக்கத்தையும் ஒன்றாக இணைத்திருந்தது. இந்தப் பாலத்தின் முதலிலும், கடைசியிலும் ஒவ்வொரு பெரிய அரண்மனைகள் கட்டியிருந்தது. ஒரு அரண்மனையிலிருந்து அந்த அரண்மனைக்குப் போக அடியில் சுரங்கப்பாதை அமைக்கப் பட்டிருந்தது. இந்த சுரங்கம் வெண்கலத்தகட்டினால் செய்யப்பட்டிருந்தது. இதன் வழியில் இடையிடையே அநேக விருந்து அறைகளும் இருந்தது. அந்தப் பட்டணத்தில் உண்டாக்கியிருந்த தொங்கு தோட்டங்கள் உலகத்திலுள்ள ஏழு அதிசயங்களில் ஒன்றாக இருந்தது. இந்த பூந்தோட்டங்கள் ஒவ்வொன்றும் 400 அடி சதுரமும் ஒன்றின் மேல் ஒன்றாக மேல் நிலைப்பணியில் 350 அடி உயரமுள்ளதாகவும் இருந்தது. ஒவ்வொரு மேல் நிலைகளும் பெரிய கற்கள் பதித்து அதன் மேல் இரண்டு வரிசை செங்கல் வைத்து அதன் மேல் சிமெண்ட் கொண்டு பூசி தண்ணீர் விட்டால் ஒழுகாமலிருக்க அதன் மேல் பாகத்தில் ஈயத்தகடும் நிரப்பி, அதன் மேல் மண்போட்டு மரங்களும், செடிகளும் நடப்பட்டிருந்தது. தூரம்பார்வைக்கு அது ஒரு அழகான பூந்தோட்டங்கள் உள்ள மலைக்குன்று போல் காட்சி அளித்தது. நேபுகாத்நேச்சார் தனது மனைவியுடைய சந்தோஷத்திற்காகத்தான் இப்படிப்பட்ட காரியங்களை எல்லாம் செய்தான். அவள் மேதியா தேசக்காரியாயிருந்தாள். ஆகையால் அவள் அந்த தேசத்திலுள்ள மரங்களும், தோட்டங்களும் வேண்டுமென்று ஆசைப்பட்டாள். அதனால் அவள் விருப்பத்தை நிறைவேற்றத்தான் அவன் இந்த தொங்கு தோட்டத்தை செய்தான். உலகத்தில் எல்லா பட்டணங்களிலும் பாபிலோன் மிக அழகுள்ள பட்டணமாய் இருந்தது.

இதன் அரண்மனைகளில் 250 அடி உயரமுள்ள எட்டு கோபுரங்கள் இருந்தன. 45 அடி உயரமான பொற்சிலை ஒன்று இருந்தது. அது 30 கோடியே 25 லட்சம் மதிப்புக்குரியதாக இருந்தது. இதன் உபகரணங்கள் 90 கோடி மதிப்புடையது. இந்த சிலையின் பெயர் நேபோ. இதை அங்குள்ள ஜனங்கள் வணங்கி வந்தார்கள். நிம்ரோத்தின் காலம் துவக்கி பல நூற்றாண்டுகளாக அபிவிருத்தியடைந்து நேபுகாத்நேச்சாரின் காலம் வந்த போது மேல் சொல்லியிருக்கும் எல்லா மேன்மையும் அடைந்த பாபிலோன், வர வர விக்கிரக வணக்கம் பெருகி தெய்வம் இல்லாமையும், துன்மார்க்கமும் தேசத்தில் தாண்டவமாடி தேசம் சீர் குலைந்து, தோல்வி அடைந்து மேதியா, பெர்சியா ராஜாக்களால் பிடிக்கப்பட்டது. இப்ப

டியே பாபிலோன் சாம் ராஜ்யம் முடிவடைந்தது.

தானியேல் கண்ட தரிசனத்தில் (தானி 7:4) இவ்விதமாக கூறப்பட்டுள்ளது. முந்தின மிருகம் சிங்கத்தைப்போல இருந்தது. அதற்கு கழுகின் செட்டைகள் உண்டாயிருந்தது. அவன் பார்த்துக்கொண்டிருக்கையில் அதன் இறகுகள் பிடுங்கப்பட்டது. அது தரையிலிருந்து எடுக்கப்பட்டு, மனுஷனைப்போல் இரண்டு காலின் மேல் நிமிர்ந்து நிற்கும்படி செய்யப்பட்டது. மனுஷ இருதயம் அதற்குக்கொடுக்கப்பட்டது. பாபிலோன் சிங்கத்தைப்போல் பலமானதாகக் காணப்பட்டது. சிங்கம் கொடூரமானது. பயங்கரமானது; கழுகின் செட்டைகள் அதன் தீவிரத்தையும், உயர்வையும், மேன்மையையும் காட்டுகிறது.

அதன் இறகுகள் பிடுங்கப்பட்டன:- அவன் பெருமையினால் சிங்காசனத்தை விட்டு கீழே தள்ளப்பட்டான். ஏழு வருடம் மாட்டைப்போல் புல்லை மேய்ந்தான். (பெருமையுள்ளவர்களுக்கு தேவன் எதிர்த்து நிற்கிறார்; தாழ்மையுள்ளவர்களுக்குக்கோ கிருபை அளிக்கிறார். (1 பேதுரு 5:5)

பழைய சாம்ராஜ்யத்தின் கொடி அடையாளமும் இறகுள்ள சிங்கம் என்பது சரித்திரம் மூலம் அறிகிறோம். B.C 606-508 வரை. இந்த காலங்களில் பாபிலோன் சாம்ராஜ்யத்தின் தலைநகர் இருந்த இடத்தில் பரிசோதனை நடத்தின பூமி சாஸ்திரக்காரர்கள் கண்டு பிடித்த அதிகமான இறகுள்ள சிங்க ரூபமான சாமான்கள் அதற்கு சாட்சியாக இருக்கிறது. இஸ்ரவேல் தெறிப்பட்டுப் போன ஆடு. சிங்கங்கள் அதைத் துரத்தின, முதலில் அசீரியா ராஜா அதைப் பட்சித்தான்; கடைசியில் பாபிலோன் ராஜாவாகிய இந்த நேபுகாத்நேச்சார் அதின் எலும்புகளை முறித்தான். (எரே 50:17) சிங்கம் அந்த சாம்ராஜ்யத்தின் மேன்மையும்,இறகு அதன் வளர்ச்சியின் வேகத்தையும் காட்டுகிறது. சிங்கம் மிருகங்களின் ராஜாவாக இருக்கிறது போல பாபிலோன், சாம்ராஜ்யங்களின் மகிமையாக இருந்தது. கழுகின் இறகு வேகமான போக்கையும், தூரமான படையெடுப்பின் நோக்கத்தையும் காட்டுகிறது. அதைக் குறித்து (ஆபகூக் 1:6-8) ஆபகூக் தீர்க்கதரிசி சொல்வது என்னவென்றால் இதோ நான் கல்தேயர் என்னும் கொடிதும் வேகமுமான ஜாதியை எழுப்புவேன். அவர்கள் தங்களுடையதல்லாத வாசஸ்தலங்களைக் கட்டிக் கொள்ளத் தேசத்தின் விசாலங்களில் நடந்து வருவார்கள். அவர்கள் கெடியும் பயங்கரமுமானவர்கள். அவர்களுடைய நியாயமும், அவர்களுடைய மேன்

மையும் அவர்களாலேயே உண்டாகும். அவர்களுடைய குதிரைகள் சிவிங்கிகளிலும் வேகமும், சாயங்காலத்தில் திரிகிற ஓநாய்களிலும் தீவிரமுமாயிருக்கும். அவர்களுடைய குதிரை வீரர் பரவுவார்கள்: அவர்களுடைய குதிரை வீரர் தூரத்திலிருந்து வருவார்கள்; இரைக்குத் தீவிர்க்கிற கழுகுகளைப் போல் பறந்து வருவார்கள். தானியேலின் காலத்தில் தோல்வி நிமித்தம் அந்த சாம்ராஜ்யம் ஆடிக் கொண்டிருந்தது. தரிசனம் கிடைத்து மூன்று வருடம் முடிவதற்கு முன்பு தானே பாபிலோன் கீழ் அடங்கியது.

2. மேதியா பெர்சியா ராஜ்யங்கள்

இரண்டாவது சாம்ராஜ்யம் மேதியா பெர்சியா சாம்ராஜ்யம். பாபிலோனின் தோல்வியை தொடர்ந்து தானியேல் சுட்டிக் காட்டியிருக்கிறான். அந்த இரவுதானே கல்தேயரின் ராஜாவான பெல்ஷாத்சார் கொல்லப்பட்டான். பெர்சியா ராஜாவாகிய கோரேஸ் பாபிலோனை பிடித்தான். மேதியனாகிய தரியு தனது 62 வது வயதில் ராஜ்யத்தைக் கட்டிக் கொண்டான்.(தானி5:30-31) ஒரு ஆட்டுக்கடா, ஒரு வெள்ளாட்டுக்கடா இவைகளின் தரிசனத்தில் (தானி8:20) ஆட்டுக்கடாவின் இரண்டு கொம்புகள், சிலையின் இரண்டு கைகளாகிய மேதியா பெர்சியா என்பவையாகும். பாபிலோன் சரம்ராஜ்யத்திற்கு ஒரு தலை மட்டும் உள்ள போது மேதியா, பெர்சியா இரு சாம்ராஜ்யம் என்று தெரிகிறது. இது சிலையின் இரு கரங்களும் என்று பார்க்கும் போது கூடுதல் பெலவீனமான மேதியாவை இடது கையும், பெலமான பெர்சியாவை வலது கையும் காட்டுகிறது. மார்பும், புயங்களும் வெள்ளி என்பது இதைத்தான் காட்டுகிறது. வெள்ளி பொன்னைவிட தாழ்ந்தது அது போல் மேதியா, பெர்சியா சாம்ராஜ்யம் பாபிலோன் சாம்ராஜ்யத்தை விட தாழ்ந்த நிலைமையில் காணப்பட்டது. விஸ்தீரணத்தில் குறைவு உள்ளது என்றாலும் பெர்சியா ராஜாவாகிய கோரேஸ் கூடுதல் ராஜ்யம் பிடித்திருந்தான். ஆனால் பணம் மற்றும் வசதிகள் பாபிலோனை விட இவைகளில் மிகவும் குறைந்த நிலமைதான் காணப்பட்டது.

கோரேஸ் பாபிலோனை பிடிக்கிறதற்கு 175 வருடங்களுக்கு முன்னே அவனுடைய காரியம் வேத வசனத்தில் காட்டப்பட்டுள்ளது. (ஏசா 44:28;45:1-4) கோரேசைக் குறித்து அவன் என் மேய்ப்பன்; அவன் எருசலேமை நோக்கி; நீ கட்டப்படு என்றும்: தேவாலயத்தை நோக்கி: நீ அஸ்திபாரப்

படு என்றும் சொல்லி, எனக்குப் பிரியமானதையெல்லாம் நிறைவேற்றுவான் என்று சொல்லுகிறவர் நான். கர்த்தராகிய நான் அபிஷேகம் பண்ணின கோரேசுக்கு முன்பாக ஜாதிக ளைக் கீழ்ப்படுத்தி, ராஜாக்களின் இடைக்கட்டுகளை அவிழ்க் கும் படிக்கும், அவனுக்கு முன்பாக வாசல்கள் பூட்டப்படாதி ருக்க, கதவுகளைத் திறந்து வைக்கும் படிக்கும், அவனைப் பார்த்து, அவன் வலது கையைப் பிடித்துக் கொண்டு, அவ னுக்குச் சொல்லுகிறதாவது நான் உனக்கு முன்னே போய், கோணலானவைகளைச் செவ்வையாக்குவேன். உன்னைப் பெயர் சொல்லி அழைக்கிற இஸ்ரவேலின் தேவனாகிய கர்த் தர் நானே என்று நீ அறியும்படிக்கு, வெண்கலக் கதவுகளை உடைத்து, இருப்புத் தாழ்ப்பாள்களை முறித்து, அந்தகாரத் தில் இருக்கிற பொக்கிஷங்களையும்; ஒளிப்பிடத்தில் இருக் கிற புதையல்களையும், உனக்குக் கொடுப்பேன்; நான் என் தாசனாகிய யாக்கோபினிமித்தமும், நான் தெரிந்து கொண்ட இஸ்ரவேலினிமித்தம், நான் உன்னைப் பெயர் சொல்லி அழைத்து, நீ என்னை அறியாதிருந்தும்; உனக்கு நாமம் தரித் தேன்.

இதிலிருந்து முதலாவது பாபிலோனை பிடிப்பதற்கும் இரண்டாவது பாபிலோனிய சிறையிருப்பின் காலத்தின் முடி வில் அதாவது B.C 536-ல் யூதர்கள் திரும்பச் சென்று தேவால யம் கட்ட வேண்டும் என்றுள்ள கட்டளை கொடுப்பதற்கும் கோரேஸ் பிறப்பதற்கு நூற்றுக்கதிகமான வருடங்களுக்கு முன்னே அவன் அபிஷேகம் பண்ணப்பட்டிருந்தான் என்பது தெரிகிறது.

B.C 588-ல் பாபிலோன் பிடிக்கப்பட்டபோது மேதியா, பெர்சியா என்ற ராஜ்யங்களில் பழக்கமுள்ளது மேதியா, ஆகையால் கோரேசுக்கு மற்று சில காரியங்கள் நிறைவேற்ற வேண்டியிருந்ததினால் தன்னுடைய சிறிய தகப்பனும், மேதியா ராஜாவுமான தரியு ராஜாவை பாபிலோனில் ராஜா வாக நியமித்தான். அப்படி தரியு இரண்டு வருடம் பாபிலோ னில் ஆளுகை செய்தான். B.C 536-ல் கோரேசின் தகப்பனான காம்பியஸ் என்ற பெர்சியா ராஜாவும் மரித்தான். அதனால் கோரேஸ் இந்த இரண்டு ராஜ்யங்களுக்கும் அதிபதியானான். ஏழு வருடம் ஆண்டபிறகு கோரேஸ் சாம்ராஜ்யத்தை தனது மகனான காம்பியஸ் என்பவனுக்கு விட்டுக் கொடுத்தான். இந்தக் காம்பியஸ் B.C 532 வரை 7 வருடமும் 5 மாதமும்

அரசாண்டான். ஏழாம் மாதம் முதல் 46 வருடம் வரை உள்ள அரசாட்சியில் ஏழு இராஜாக்கள் ஒன்றன்பின் ஒன்றாக B.C 335 வரை ஆளுகை செய்தார்கள். பெர்சியா ராஜாக்களுடைய நிலையில் கடைசி ராஜாவான தரியு ராஜா நல்லவனும், உத்தமனுமாக இருந்தான். அவனது ஆளுகை காலம் நீண்டதும் நேர்த்தியானதுமாக காணப்பட்டது. அப்படியிருந்தும் பாக்கியம் இல்லாத நிலையில் வெண்கல ராஜ்யத்திற்கு வழி விலகி கொடுக்க வேண்டிய சமயம் வந்தது. இதை தடுத்து நிறுத்த யாருக்கும் முடியவில்லை. B.C 330-ல் கிரேக்கு தேசத்தானான அலெக்ஸாண்டர் பெர்சியா சாம்ராஜ்யத்தில் படையெடுத்து அதை கீழடக்கினான்.

3. கிரேக்கு சாம்ராஜ்யம்

மூன்றாவதான கிரேக்கு சாம்ராஜ்யம் தானியேல் 8:21-ல் சொல்லியிருக்கிற வெள்ளாட்டுக்கடா என்று காபிரியேல் தூதன் சொன்னான். மேதியா, பெர்சியா சாம்ராஜ்யங்களாகிய ஆட்டுக்கடாவை இந்த வெள்ளாட்டுக்கடாவாகிய கிரேக்கு சாம்ராஜ்யம் அழித்துப் போட்டது.

இரண்டு கொம்புள்ள ஆட்டுக்கடா பெர்சியா ராஜாவை குறிக்கிறது. ரோமமுள்ள வெள்ளாட்டுக்கடா கிரேக்கு ராஜ்யமும் அதின் கண்களின் நடுவில் உள்ள பெரிய கொம்பு கிரேக்கு ராஜ்யத்தின் முதலாம் இராஜாவாகிய அலெக்சாண்டரும் ஆகும். (தானி 8:20-21) திரும்பவும் நாம் கீழ்த்தரமான உலோகத்தைத்தான் காண்கிறோம். வெண்கலம் வெள்ளியை விட விலை குறைந்த உலோகம், அகில உலகத்திற்கும் கீர்த்தியாய் காணப்பட்ட அலெக்சாண்டரின் ஆளுகையின் கீழிருந்த கிரேக்கு சாம்ராஜ்யம் மிகவும் சுருக்கமான காலம் மட்டுமே நிலை நின்றது. எட்டு வருட ஆளுகையின் பின் அலெக்சாண்டர் வியாதிப்பட்டான். அதோடு குடிவெறியினால் அவனுக்கு வந்த கஷ்டம் நிமித்தம் அவன் தனது 32-வது வயதில் (B.C 323-ல்) மரணமடைந்தான். தொடர்ந்து அவனது சாம்ராஜ்யம் அவனது நான்கு சேனைத்தலைவர்களுக்காக பிரிக்கப்பட்டது. (தானி 8:22) அந்த கொம்பு முறிந்து போனபின்பு நான்கு கொம்புகள் எழும்பினது. அது என்னவென்றால் அந்த ஜாதியில் நான்கு ராஜ்யங்கள் எழும்பும். ஆனாலும் அவனுக்கு இருந்த வல்லமை அவைகளுக்கு இராது.

இங்கே நாம் ஒரு முக்கியமான காரியம் கவனிக்க வேண்

டும். நான்கு ராஜ்யங்களும் ஒன்றன் பின் ஒன்றாக நன்றாய் வந்தது. என்றாலும் இவைகளுக்கு மத்தியில் ஒரு இடைக்காலம் இல்லாமல் இருக்க முடியாது. மகா சக்கரவர்த்தியான அலெக்சாண்டருடைய மரணத்திற்குப்பின் B.C 323 முதல் B.C 30 வரை கிரேக்கு சாம்ராஜ்யத்தை தொடர்ந்து ரோம் ராஜ்யமும் அதே நிலையில் இருந்தது. கிரேக்கு ராஜ்யம் சாதாரண ஒரு சாம்ராஜ்யம் அல்ல. த்ரேஸ், மாசிடோனியா, சீரியா, எகிப்து என்ற நான்கு ராஜ்யங்கள் சேர்ந்திருந்தது. B.C 30 முதல் ரோம் ராஜ்யத்து மக்கள் எகிப்தை பிடிக்கும் வரை இந்த ராஜ்யங்கள் ஒவ்வொன்றாக தோல்வியடைந்து கொண்டிருந்தது. ரோம் மக்கள் எகிப்தைப்பிடித்ததோடு ஜெயவீரர் என்ற உலக புகழ் பெற்ற பெயரை பெற்றுக் கொண்டார்கள். கிரேக்கு சாம்ராஜ்யம் இந்தப் பிரகாரம் நான்காக பிரிக்கப்படும் என்று சிலையில் காட்டப்படவில்லை. வெண்கலத்தின் காரியத்திலும் வெள்ளியிலும், இரும்பிலும் யாதொரு வித்தியாசமும் காட்டப்படவில்லை. ஆனால் தானியேல் எட்டாம் அதிகாரம் 21-25 வரையுள்ள வசனத்தில் வெள்ளாட்டுக் கடாவின் காரியத்தில் அது விளங்குகிறது. நேபுகாத் நேச்சர் கண்ட சிலையில் அது காணமுடியாவிட்டாலும், தானியேல் கண்ட தரிசனத்தின் மிருகங்களில் அது காணலாம். எப்படியும் கிரேக்கு சாம்ராஜ்யம் நான்காகப் பிரிக்கப்பட்டது. பின் ஒவ்வொன்றாக நஷ்டப்பட்டது. கடைசியாக B.C 30- ல் எகிப்து படையெடுத்ததும் நான்காவது ரோம் சாம்ராஜ்யம் ஆட்சிக்கு வந்தது. சிலையின் இரண்டு கால்களைக் காண்பிக்கிற நிலையில் கிழக்கும், மேற்குமாய் ரோம் சாம்ராஜ்யம் A.D 364 வரை பிரிக்கப்படாததினால் அதற்கு முன்னே சம்பவித்ததெல்லாம் சிலையின் சரீரத்தோடுள்ள தொடர்பில் தான் நடந்தது என்றும் கால்களோடுள்ள ஐக்கியத்தில் அல்ல என்றும் அறிய வேண்டும். நாம் இன்றுள்ள உலக சரித்திரத்திலிருந்து அறிவதெல்லாம் வேத வசனம் தெளிவாய் வெளிப்படுத்தி தருகிறது. கீழே சொல்லப்படுகிற வேத வசனங்கள் வாசித்தால் விளங்கும். வயிறும், தொடையும் வெண்கலமும், கால்கள் இரும்பும், கால் விரல்கள் பாதி இரும்பும், பாதி குயவனின் களிமண்ணுமாகவும் இருந்தது. *(தானி 2:32-38)*

4. ரோம் சாம்ராஜ்யம் B.C168-A.D 476.

நான்காம் சாம்ராஜ்யம் ரோம், ரோமின் பெயர் தானியேல் தீர்க்கத்தரிசனத்தில் சொல்லவில்லை என்பது சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறது. நான்காவது சாம்ராஜ்யம் இரும்பைப் போல் உரமுள்ளதாய் இருக்கும். இரும்பு எல்லாவற்றையும் எப்படி நொறுக்கி சின்னாபின்னம் ஆக்குகிறதோ அப்படியே இதுவும் மற்ற ராஜ்யங்களையெல்லாம் நொறுக்கித் தகர்த்துப் போடும். (தானி 2:40) ரோம் சாம்ராஜ்யம் இந்த தீர்க்கத்தரிசனத்தை எவ்வளவு திட்டமாய் நிறைவேற்றியிருக்கிறது என்று சரித்திரம் அழகாய் சொல்லுகிறது. பொன், வெள்ளி, வெண்கலம் என்பவைகளோடு சம்மந்தப்பட்ட ராஜயங்களையும், அவைகளுடைய ராஜாக்களையும் ஐரோப்பாவிலுள்ள ஒரே அரசாட்சி நிர்மூலமாக்கின காரியங்களை சிபர் என்ற சரித்திரக்காரன் எழுதின புஸ்தகத்தில் 38-ம் அதிகாரத்தில் சொல்லியிருக்கிறார்.

ரோம் சாம்ராஜ்யத்தை கீழ் அடக்குவதற்கு உலக பிரகாரமான ஒரு சாம்ராஜ்யம் உண்டாகிறதில்லை. இந்த நான்காவது ராஜ்யம் தம்மில் ஐக்கியப்படாத நிலையில் பல சின்ன சின்ன ராஜ்யங்களாகப் பிரிக்கப்பட்டு, அதே நிலையில் உலகத்தின் கடைசி வரை முன்னேறி செல்லும் என்பது தீர்க்கத்தரிசனம்.

பாதங்களும் கால்விரல்களும் பாதி இரும்பும், பாதி குயவனின் களிமண்ணுமாக இருப்பதின் ரகசியம் அந்த ராஜ்யம் பிரிக்கப்படும்; களி மண்ணோடே இரும்பு கலந்திருக்கக் கண்ட படியே இரும்பினுடைய உறுதியில் கொஞ்சம் அதிலே இருக்கும். கால் விரல்களில் பாதி இரும்பும் பாதி களி மண்ணுமாய் இருக்கிறது என்னவென்றால் அந்த ராஜ்யம் ஒரு பங்கு உரமும், ஒரு பங்கு நெரிசலுமாய் இருக்கும். இரும்பை களிமண்ணோடே கலந்ததாகக் கண்டது போல அவர்கள் மற்ற மனுஷரோட சம்மந்தம் கலப்பார்கள்; ஆகிலும் இதோ களி மண்ணோடே இரும்பு ஒட்டிக் கொள்ளாதது போல அவர்கள் ஒருவரோடொருவர் ஒட்டிக் கொள்ளாதிருப்பார்கள்.

இந்த தீர்க்கத்தரிசனங்கள் எவ்வளவு தெளிவாக நிறைவேறி இருக்கிறது என்பதை ஐரோப்பிய சரித்திரங்கள் திட்டமாகக் கூறுகிறது. இன்றுள்ள ராஜ்யங்களான ஜெர்மனி, பிரான்ஸ், சிக்ஸர்டே, போர்த்துகீஸ், இங்கிலாந்து போன்ற

வைகள் ரோம் ராஜ்யத்தின் பாகங்கள். அன்று முதல் இன்று வரை இந்த ராஜ்யங்களைக் கூட்டிச் சேர்க்க கடும் பிரயாசம் எடுத்த போதிலும் அவர்களுடைய முயற்சி எல்லாம் தோல்வி யாக முடிந்தது. அந்த முக்கியமானவர்களின் பெயர் வரிசை:-

8-ம்	நூற்றாண்டில்-	சார்லிமெயில்
16-ம்	நூற்றாண்டில்-	சார்லஸ் பெஞ்சமின்
18-ம்	நூற்றாண்டில்-	14-ம் லூயி
19-ம்	நூற்றாண்டில்-	நெப்போலியன் போனபெட்
20-ம்	நூற்றாண்டில்-	உலக மகா யுத்தத்தில் வில்லியம் கைசர்
20-ம்	நூற்றாண்டில்-	2-ம் உலக மகா யுத்தத்தில் ஹிட்லர்.

இன்றுள்ள ஐரோப்பாவை உலக பிரகாரமான மனுஷர்க ளைக் கொண்டு ஒரே ஐக்கியமான ஆளுகையின் கீழ் கொண்டு வர மேற் கூறிய யாவரும் எவ்வளவோ பிரயாசப்பட்டும் யாரைக் கொண்டும் முடியவில்லை.

பத்தாக பிரிக்கப்பட்ட ரோம் ராஜ்யம் அந்தப் பிரிவுகளின் அனுமதியோடு கூட அது உன்னத பதவி அடையும். இப் போது அடைந்தாயிற்று பாப்பா மார்க்கம் உயர்வடைந்தது. இந்தப்பிரகாரம் தான் ராஜ்ய சம்மந்தமாகவும், மத சம்மந்தமா கவும், கர்த்தத்துவம் அடைந்த இன்னொரு சக்தி ரோமிலுள்ள பாப்பா மார்க்கம் தான், என்று சரித்திரம் கூறுகிறது.

முன்னே உள்ள கொம்புகளில் மூன்று பிடுங்கப்பட்டது (தானி 7:8) அந்தக் கொம்புகள் நான் கவனித்திருக்கையில், இதோ, அவைகளுக்கு இடையிலே வேறொரு சின்ன கொம்பு எழும்பிற்று அதற்கு முன்பாக முந்தின கொம்புகளில் மூன்று பிடுங்கப்பட்டது; இதோ, அந்தக் கொம்பிலே மனுஷ கண்க ளுக்கு ஒப்பான கண்களும் பெருமையானவைகளை பேசும் வாயும் இருந்தது.

(தானி 7:24-25) அந்தப் பத்து கொம்புகள் என்னவென் றால் அந்த ராஜ்யத்திலே எழும்பும் பத்து ராஜாக்களாம்; அவர் களுக்குப் பின்பு வேறொருவன் எழும்புவான்; அவன் முந்தின

வர்களைப் பார்க்கிலும் வேறாயிருந்து, மூன்று ராஜாக்களைத் தாழ்த்திப்போட்டு, உன்னதமானவருக்கு விரோதமாக வார்த் தைகளைப்பேசி, உன்னதமானவருடைய பரிசுத்தவான்களை ஒடுக்கி, காலங்களையும் பிரமாணங்களையும் மாற்ற நினைப் பான்; அவர்கள் ஒரு காலமும் , காலங்களும், அரைக்காலமும் செல்லுமட்டும் அவன் கையில் ஒப்புக் கொடுக்கப் படுவார் கள்.

அந்தக் காரியம் நிறைவேறியதும் பாப்பா மார்க்கத்தில் தான். இப்போதுள்ள ராஜ்யங்களில் மூன்று ராஜ்யங்கள் தான் அதை ஏற்றுக் கொண்டிருந்தது. மத சம்மந்தமான நிலமை பாப்பா மார்க்கத்தின், பிறகு உள்ள எண்ணங்களுக்கு எதிராக இருந்ததினால், அந்த சக்தியுடைய உயர்வில் தானே அவர் களை அழித்துப் போட்டார்கள் என்று சரித்திரம் கூறுகிறது. நாம் தீர்க்கதரிசனமும், சரித்திரமும் ஒத்துப்பார்த்தால் அந்தச் சின்ன கொம்பு முளைத்து, சரியான காலத்தில் நிச்சயமாய் ரோமில் பாப்பா மார்க்கம் உருவானது என்று காண முடியும்.

இந்த கொம்பில் மனுஷ கண்ணும் தூஷணம் பேசுகிற வாயும் இருந்தது. இந்த விளம்பரம் அப்போதுள்ள சக்தி, ஒருமனுஷனில் கிரியை செய்து ஆரம்பித்த ஒன்று என்பது தெளிவாகிறது. பாப்பா மார்க்கம் அல்லது ரோம மார்க்கம் முழுவதும் அதனுடைய தலைவனாகிய மார்ப்பாப்பா என்ப வருடைய உள்ளத்தில் தான் கிரியை செய்து ஆரம்பித்தது.

அந்த மனிதனின் எண்ணம், ஒரு ராஜ்ய சிங்காசனத்தில் உட்கார்ந்து கொண்டு, முன் ஐக்கியமாய் இருந்த கொம்பு களை விட சக்தி உடையவனாய் தோன்றும்படி, அது மற்ற ராஜ்யங்களுக்கு மேலாக தன்னைத்தான் உயர்த்தினது என்று சரித்திரம் கூறுகிறது. அது பேசின தூஷண வார்த்தைகள் நாம் கேட்கவும்; பரிசுத்தவான்களோடு பண்ணின யுத்தம் நாம் பார்க்கவும் செய்கிறோம். வேத வசனங்களுக்கு எதிராக மார்ப் பாப்பா சொல்லியிருக்கிற சொந்த எதிர்ப்புகள் ஒவ்வொன் றும் வம்புதான் என்று எல்லா மனிதருக்கும் தெரியும். பாப்பா ஒரு மனிதன் மட்டுமல்ல தானும் தெய்வத்தைப் போல் உள்ள வன் என்று காட்டுகிறவனும், தேவனுடைய ஆசாரியனுமாய் இருப்பான். பூமியில் பாப்பாய்க்கு மட்டும் தான் உன்னதமான வன், திவ்ய ராஜா. மகா சக்ரவர்த்தி, ராஜாதி ராஜா என்ற பட்டப் பெயர்கள் உண்டு. கிறிஸ்துவைப் போல் அதே இடம்

பெறத்தக்க வண்ணம் பாப்பாய்க்கு அவ்வளவு பிரதானமான பெயர்கள் வைத்திருக்கிறார்கள். ஆகையால் பாப்பா உச்சரிக் கிறதெல்லாம் தேவனுடைய வாயிலிருந்து புறப்படுவதாக அவர்கள் எண்ணிக் கொள்ளுகிறார்கள்.

தானி 9:26ல் 70 வாரத்தைக் குறித்து சொல்லப்பட்டிருக் கிற தரிசனத்தில் மேசியாவாகிய பிரபு (கிறிஸ்து) சங்கரிக்கப் பட்ட பின், அதாவது சிலுவையில் அறையப்பட்டபின், ஒரு ஜனக்கூட்டம் எருசலேம் தேவாலயத்தை நாசம் பண்ணுவார் கள் என்றும், அந்த ஜனக்கூட்டத்திலிருந்து கடைசியில் ஒரு பிரபு எழுந்திருப்பான் என்றும், அந்தப் பிரபு அந்திக் கிறிஸ்து (எதிர் கிறிஸ்து) என்றும் நாம் அறியவேண்டும் என்று சொல் லப்பட்டிருக்கிறது. எருசலேம் தேவாலயத்தை A.D-70-ல் ரோம் ஜனங்கள் நாசம் பண்ணினார்கள். ரோம் சாம்ராஜ்யத் தின் கடைசி சக்கரவர்த்தி அந்திக் கிறிஸ்துவாயிருப்பான். தானியேல் கண்ட நான்காவது உள்ள கெடியும், யங்கரமுமான மிருகத்தின் சின்னக் கொம்பு எதிர் கிறிஸ்து. ஆகையால் அது சிலையின் இரும்புப் பாகத்தோடு ஒப்பாக இருக்கிறதென்றும் நான்காவது சாம்ராஜ்யம் ரோம் தான் என்றும் நாம் அறிகி றோம். இந்தப் பிரகாரம் உலோகங்களால் சிலையின் மூலம் வெளிப்படுத்தப்படும் நான்கு சாம்ராஜ்யங்களும் அதின் ஒழுங்கின் பிரகாரம் தானியேலுக்கு காட்டப்பட்டுள்ளது.

நான்காம் சாம்ராஜ்யத்தைக் குறித்து நாம் அறிய வேண் டிய மூன்று காரியங்கள் உண்டு. முதலாவது கால்கள் என்று வாசிக்கும்போது சிலையின் பாதி உயரம் இதற்கு வேண்டிவ ரும். ஆகையால் ஒழுங்கு முறையாகச் சொல்லும் போது மற்ற சாம்ராஜ்யங்களை விட கூடுதல் காலங்கள் ரோம் சாம்ராஜ்யத் திற்கு உண்டாயிருக்கும். சரித்திரத்திலிருந்து இது உண்மை என்று நாம் அறியலாம். இரண்டாவது இந்த சிலையில் கால் கள் இரண்டு பிரிவாக பிரிக்கப்பட்டிருக்கிறது. இதிலிருந்து ரோம் சாம்ராஜ்யம் இரண்டாய் பிரிக்கப்பட்டு கிழக்கு பாகத் திற்கு காண்ஸ்டான்டி நோபிள் தலைநகர் ஆக்கப்பட்டது. மேற்கு பாகத்திற்கு A.D364-ல் ரோம் தலைநகரமாக ஏற்படுத் தப்பட்டது. இது உண்மை என்று நமக்கு விளங்கும். மூன்றா வது சிலையின் இரண்டு கால்களும் ஒவ்வொன்றில் ஐந்து விரல்களாக பிரிக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பத்து கால் விரல் களின் காலம் இது வரை வெளிப்பட்டு வராமல் இருந்தது. இப்போது அது வெளிப்பட்டாயிற்று. இதனால் சிலையின்